# வேத பாரதி செய்திகள்


தமிழ் மாத இதழ்

VEDABHARATHI SEITHIGAL Tamil Monthly

| | | | |
|---|---|---|---|
| மலர் : 9 | இதழ் :6 | மார்ச் : 2025 | ரூ.20/- |
| Volume : 9 | Issue : 6 | March : 2025 | Rs.20/- |


## ப்ரயாக்ராஜ் கும்பமேளா 2025



# SHRI MAHA MERU MANDALI TRUST

81/1, Mannappa Street, Kottur, Chennai - 600 085.







2014-ம் ஆண்டு முதல் வேதபாரதியின் வளர்ச்சிக்கு வித்திட்ட ஸ்ரீ மஹாமேரு மண்டலி குருஜி அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறோம். முதன் முதலில் வேதபாரதி செய்திகள் மாத இதழ் கலரில் வர வேண்டும் என்றும், அதிக பக்கங்களுடன், இதழ் அதிக உறுப்பினர்களுக்கும் சென்றுசேர வேண்டும் என்ற குருஜியின் ஸங்கல்பம் நிறைவேறி 11 ஆண்டுகளாக தொடர்கிறது. வேதபாரதியின் வளர்ச்சிக்கும் சேவைக்கும், ஸ்ரீமஹா மேரு மண்டலி குருஜியின் ஆசீர்வாதங்கள் என்றும் வேண்டும்.

என்றும் பணிவுடன்

வேதபாரதி குழுவினர்

# வேதபாரதி
## செய்திகள்




**காயத்ரீ தேவி**

**வியனுலகனைத்தையும் அமுதென நுகரும்**
**வேத வாழ்வினைக் கைப்பிடித்தோம்.** மஹாகவி பாரதி

# அறிவோம் வேதம்

*இந்தப் பகுதியில் ஒவ்வொரு மாதமும் ஒரு வேதமந்திரமும் அதற்குண்டான பொருளும் வழங்கப்படும்.*

## வேதமந்திரம் - 67

**ப்ரணவோ தநு: சரோ ஹ்யாத்மா ப்ரஹ்ம தல்லக்ஷ்யமுச்யதே/**

**முண்டகோபநிஷதம்.**

**பொருள் :** *ஓங்காரமே வில்; ஜீவன் என்கிற பாணத்தை (அம்பு) ப்ரம்மம் என்கிற லக்ஷ்யத்தில் சேர்ப்பதற்கு வேண்டிய வில்லே ஓங்காரம்.*

*ஓங்காரத்தின் மூலம் கற்பனையான ஜீவத்துவத்தை விட்டு ஸ்வரூபமாகிய ப்ரஹ்மத்தில் ஒன்றாக இணைய வேண்டும் என்பதே தாத்பரியம்.*

*|| ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ||*

# வேதபாரதி செய்திகள்

**(ஆன்மீக மாத இதழ்)**

மலர்: 9 இதழ்: 6



அச்சிட்டு வெளியிடுபவர்
பதிப்பாளர், ஆசிரியர்

**ஆர்.வெங்கட்ராமன்**
27, F1 அன்னை இந்திரா நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
செல்: 70101 88571



அச்சகம்
**சபாநாயகம் பிரிண்டர்ஸ்**
39, மில்லர்ஸ் சாலை, கீழ்ப்பாக்கம்,
சென்னை - 600 010.

REGD No : TN/CC(S) / DN / 571 / 24-26

RNI No : 1282188

Title Code : TNTAM/2016/73726

R.Dic.No.1845/2015

**VEDABHARATHI SEITHIGAL**

(Tamil Monthly Magazine)

Published on : 1-7th (1st Week) Every Month

TN/PM G (CCR) / WPP 605/24-26 /
Valid from 01.01.2024 to 31.12.2026

புத்தக வடிவமைப்பு :
**ரெம்ஸ் டிஜிட்டல் பிரஸ்**
நெ.17, பாரதிதெரு, இந்திராநகர்,
காமராஜபுரம், வேளச்சேரி,
செ - 42. போன்: 9025864231


## புத்தகத்தின் உள்ளே


| | |
|---|---|
| உங்கள் சிந்தனைக்கு | 8 |
| அட்டைப்பட விளக்கம் | 10 |
| பங்குனி மாத விசேஷங்கள் | 11 |
| ஸ்ரீமத் பகவத்கீதை | 12 |
| ஸ்ரீமத் பாகவதம் | 15 |
| ஆதிசங்கரர் | 18 |
| மூதுரை (ஔவையார்) | 21 |
| ஸ்ரீ குருவாயூர் கோயில் வரலாறும் மஹிமைகளும் | 23 |
| ஸ்ரீ மத்ஸ்ய ஜயந்தி | 26 |
| மஹாபெரியவாளின் அற்புத விளக்கங்கள் | 30 |
| சிருங்கேரி மஹா சுவாமிகள் | 36 |
| தர்மத்தின் குரல் | 37 |
| மூத்தோரே கவனியுங்கள் | 38 |
| பூக்களோடு பேசுவோம் | 41 |
| இராமாயணம் தரும் படிப்பினை | 45 |
| தருவின் நிழலில் | 49 |
| வியப்பூட்டும் விருஜ் பூமி யாத்திரை | 52 |
| சிவராத்ரி | 57 |



**சந்தா விவரம்**

| | |
|---|---|
| வருட சந்தா | ரூ.200 |
| 10 வருட சந்தா | ரூ.1500 |

வங்கி மூலம் புத்தக சந்தா வழங்கிட
**VEDABHARATHI SEITHIGAL**
**City Union Bank, Velachery Branch**
**A/c No. 510909010246740**
**IFSC : CIUB 0000262**



நிர்வாக முகவரி:
எண்.31, சேஷாத்திரிபுரம்
1வது மெயின் ரோடு, பேபி நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.

**D. சூரியநாராயணன்**
**R. வெங்கட்ராமன்**
**K. சங்கர், S. ரகுநாத்**
**Cell : 94451 02193, 98402 01625**

Email:vedabharathichennai@gmail.com
Website: www.vedabharathi.org

# பூஜ்யஸ்ரீ நெரூர் ஸ்ரீவித்யா சங்கர சரஸ்வதி ஸ்வாமிகள் அருளுரை
# மந்திரங்களின் மகத்துவம்

சென்றமாத தொடர்ச்சி...

வேதங்களே மந்த்ர மயமாக தான் இருக்கின்றன. பகவான் சொல்வதாக ஒரு ஸ்லோகம் உண்டு :

"தைவாதீனம் ஜகத் ஸர்வம், மந்த்ராதீனம் து தைவதம்" என்று. இந்த உலகமே தைவத்தின் வசத்தில் உள்ளது, அந்த தைவம் மந்த்ரத்திற்கு வசப்பட்டு இருக்கிறது. மந்த்ரம் என்பது அதை அனுஷ்டிக்கும் விப்ரர்களிடம் உள்ளது. அதனால் நான் அவர்களை வணங்குகிறேன் என்று பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கூறுகிறார்.

மந்த்ரம் என்றால் சொல்லுபவனை காப்பாற்றுவது என்று பொருள். மந்த்ரத்திற்கு உள்ள சக்தி அதை அனுபவித்தால் மட்டுமே விளங்கும். மற்றஸாஸ்திரங்களை படித்து தெரிந்து கொள்ளலாம். அதில் பட்டங்கள் சம்பாதிக்கலாம். மந்த்ரங்களை பொருத்த மட்டில் தெரிந்துகொள்வதோ படிப்பறிவு மாத்திரம் உதவாது. மந்த்ரத்தை ஒருவன் எல்லா காலத்திலும் தனது பிராணனை போலும், தனத்தை போலும், அவனுடைய குழந்தையின் இடத்தில் எவ்வளவு ஈடுபாடு காண்பிப்பானோ, அத்தகைய ஈடுபாட்டை காண்பிக்க வேண்டும். அப்படி இருந்தால் தான் பலன் தரும்.

வேதங்களில் மந்த்ரத்திற்கு பெருமையை காட்டுவதற்கு பல கதைகள் உள்ளது. உதாரணத்திற்கு, ஒருவர் இந்திரனை அழிக்க வேண்டும் என்று யாகம் செய்தார். இந்திரனுக்கு ஸத்ருவாக தனக்கு ஒரு குழந்தை வேண்டும் என்று பிரார்த்தனை செய்கிறார்.

ஸத்ரு என்றால் கொல்பவன் என்று பொருள். ஆனால் யாகம் செய்யும் பொழுது, மந்த்ர ஸ்வரத்தின் பிழையால், இந்திரனுக்கு ஸத்ரு (இந்திரனை கொல்பவன்) என்பதற்கு பதிலாக எவனுக்கு இந்திரன் ஸத்ருவோ (எவனை இந்திரன் கொல்வானோ) அப்படி ஒரு குழந்தை, என்று பிரார்த்தனை ஆகிவிடுகிறது. (வ்ருத்ராஸுரன்). இதுபோல் பல கதைகள் உள்ளன.

மந்த்ர விஸ்வாஸத்தை உணர்த்துவதற்கும் யாக்யவல்க்யர் பற்றிய விசேஷமான ஒரு கதை உண்டு. வியாஸ பகவானுக்கு நான்கு சிஷ்யர்கள். ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு வேதத்தை பிரச்சாரம் பண்ணுவதற்காக நியமித்திருந்தார் – வைசம்பாயனருக்கு யஜுர் வேதத்தை உபதேசித்தார். இவரிடம் இவரது மருமகன் யாக்யவல்க்யர் சீடராக இருந்தார். இது சமயம் அவர் அருகில் இருந்த ராஜா ஒருவனுக்கு நோயுற்றது. அது குணம் ஆவதற்காக வைசம்பாயனர் அன்றாடம் சென்று ஒரு மந்த்ரத்தை ஜபித்து அந்த தீர்த்தத்தை அவன் மேல் ப்ரோக்ஷித்துவிட்டு வருவதை வழக்கமாக கொண்டிருந்தார். இப்படி இருக்க, அவரால் ஒரு நாள் செல்ல இயலவில்லை. அதனால் தனது மருமகனான யாக்யவல்க்யரை செல்லுமாறு கேட்டுக்கொண்டார்.

சென்ற இதழில் கூறிய ப்ரகாரம், டாக்டர் மருந்து கொடுக்கும் பொழுது, இந்த மருந்தால் நமக்கு நோய் சரியாகுமா என்று சந்தேகப்படாமல், அவர் கொடுக்கிறார், நாம் சாப்பிட்டால் சரி ஆகும் என்ற நம்பிக்கை வேண்டும்.

யாக்யவல்க்யருக்கு மந்திரத்தின் மீது அபார விஸ்வாசம் உண்டு. அவர் அந்த ராஜாவிடம் சென்று ஜபத்தை முடித்து தீர்த்தத்தை ப்ரோக்ஷிக்க எடுத்து வந்தார். தினம் இதை செய்கிறோம் ஆனால் ஒன்றும்

பயனில்லையே என்று விரக்தியுடன் ராஜா, நம்பிக்கை இல்லாமல், யாக்ய வல்க்யரை "அந்த தீர்த்தத்தை சுவற்று தூண் மீது விட்டு செல்" என்றான். யாக்யவல்க்யர் மிகவும் கோபம் கொண்டு தூண் மீது ஜலத்தை தெளித்தார். மந்த்ர பலத்தினால் தூண் தங்கமயமாகிவிட்டது. இப்படி செய்துவிட்டு, அவர் அவ்விடம் விட்டு சென்றார். சிறிது நேரம் கழித்து இந்த தங்க தூணை கண்ட அரசன் திடுக்கிட்டான்.

மேற்கொண்டு அடுத்த இதழில் பார்ப்போம்.

நாராயண நாராயண

தொடரும்...



||Shri Chowdeshwari Prasanna||

**SHREE SHANKARA THAPOVANAM**

**(Shree Chandramouleswara Seva & Trust)**

Plot No.596, VGP Jayanagar, Onnalavadi, Thorapalli Panchayat, Rayakotta Road, HOSUR – 635126.

**MONTHLY SEVA**

1. Pradosha Pooja
2. Shukla Panchami Pooja
3. Ashlesha Abhishekam
4. Sankasthahara Chatrurthi
5. Go Pooja on Fridays

**GAU POSHANA SEVA**

1 Cow feeding for day rs.145/-

10 cows for day Rs.1,450/-

1 Cow for month Rs.4350/-

10 Cows for month Rs.43,500/-



**Life Time One day Pooja for Every year (Life Membership) Rs.5001/-**



*Devotees are requesting to contribute for Gou Seva*

**For Online Payments**

A/c Shree Chandramouleswara Seva & Trust, Inidan Bank,
A/c No.6189034010 IFSC Code : IDIB000B142
Branch : Hosur

**குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கும் ஸ்லோக வகுப்புகள் ஆன்லைன் மூலமாக**

சிறியவர்களுக்கு ஸ்ரீ குரு பாதுகா ஸ்தோத்திரம்

பெரியவர்களுக்கு ஸ்ரீ வேங்கடேச கராவலம்பம்

ஆசிரியர் : ஸ்ரீ முரளிதரன்,
ஸ்ரீமதி நீலா முரளி, மதுரை

தொடர்புக்கு : **9443489129**

## உங்கள் சிந்தனைக்கு....

## 18. நல் உபதேசங்கள்

*1. தன்னைவிட உயர்ந்த நிலையில் இருப்பவர்களைக் கண்டு மனம் மகிழவேண்டும். பொறாமை கொள்ளக்கூடாது. தன்னைவிட தாழ்ந்த நிலையிலிருப்பவர்களைக் கண்டு இரக்கம் கொள்ள வேண்டும். சமமாக இருப்பவர்களிடம் நட்பு பாராட்ட வேண்டும். இவ்வாறு நடப்பவனுக்கு துன்பமில்லை.*

*2. தாய் தந்தையரிடம் கடவுளைக் காணாதவர்கள் கோவிலில் காணமுடியாது.*

*3. நல்ல எண்ணமோ, நல்ல செயலோ என்றும் வீணாவதில்லை.*

*4. இரக்கமற்றஅறிவைவிட அறிவற்றஇரக்கமே மேலானது.*

*5. இனிய வார்த்தை இரும்புக் கதவையும் திறந்துவிடும்.*

*6. நற்குணங்கள் யாவும் கடவுளை நெருங்க உதவும் சாதனங்களாகும்.*

*7. வளர்ச்சி அடைவதுதான் வாழ்க்கை, அந்த வளர்ச்சிக்கு அன்பு, நேர்மை, பொறுமை ஆகியவை வேண்டும்.*

*8. வெறுப்பது அரக்க குணம், மன்னிப்பது மனித குணம். மறப்பது தெய்வ குணம்.*

*9. எப்போதும் கொடுத்து வாழ வேண்டும். யாரையும் கெடுத்து வாழக்கூடாது.*

*10. மற்றவர்களுக்கு உதவி செய்ய நாம் தயாராக இருந்தால், நமக்கு உதவி செய்ய பகவான் காத்திருப்பார்.*

*11. கஷ்டத்திலும் நேர்மையாக இரு. நீ ஏமாற்றப்பட்டாலும், பிறரை ஏமாற்றாதே. தெய்வ*

நம்பிக்கை உன்னை கைவிடாது.

12. ஒருவனை நீ எந்த வார்த்தை சொல்லி திட்டுகிறாயோ, அதே வார்த்தையில் எப்போதாவது நீ திட்டப்படுவாய்.

13. **"பாவம்"** என்பது நீ செய்யும் தீமை. **"புண்ணியம்"** என்பது நீ செய்யும் நன்மை. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.

**D. சூரியநாராயணன்**

# கனகாபிஷேகம்

வேதபாரதியின் ஆத்திசூடி கொன்றைவேந்தன்,



திருப்பாவை திருவெம்பாவை குழந்தைகளுக்கான போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்குவதில் 2013-ம் ஆண்டு முதல் பெரும்பங்கு வகித்தவர் டாக்டர் ஸ்ரீ ராம்தாஸ் அவர்கள். அவருடைய தாயார் ஸ்ரீமதி சுப்புலக்ஷ்மி அம்மாள் அவர்களுக்கு கனகாபிஷேகம் சென்னை, கௌரிவாக்கத்தில் ஸ்ரீ ஸ்ரீனிவாசன் அவர்கள் இல்லத்தில் 24.02.2025 அன்று வேதோக்தமாக மிகச்சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீனிவாசன் சகோதரர் S.ஸ்வாமிநாதன் மற்றும் சகோதரிகள், பேரன் பேத்திகள், உறவினர்கள், நண்பர்கள் கலந்து கொண்டு ஆசிபெற்றார்கள். வேதபாரதியின் சார்பில் ஸ்ரீ வெங்கட்ராமன் தம்பதியர் கலந்துகொண்டு ஆசிபெற்றார்கள்.

# அட்டைப்பட விளக்கம்
# ப்ரயாக்ராஜில் ருத்ராபிஷேகம்

பாரதநாட்டின் பெருமக்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நதிகளை தாயினும் மேலாக கொண்டாடுவதும், நதிகளில் புனித நாட்களில் நீராடுவதும், நீத்தார்களுக்கு தர்ப்பணம் வழங்குவதையும் பாக்யமாக கருதுகின்றனர்.

144 வருடங்களுக்கு பிறகு இந்த வருடம் உத்திரபிரதேசம் **"ப்ரயாக்ராஜில்"** மஹாகும்பமேளா 13.01.2025 முதல் 26.02.2025 வரை 44 நாட்கள் வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது. **"ப்ரயாக்ராஜ்"** புண்யபூமியில் இமயமலையின் கொடையாய் விளங்கும் கங்கை, யமுனை, சரஸ்வதி (பூமிக்கு அடியில்) ஆகிய மூன்று புண்ணிய நதிகள் சங்கமிக்கும் திரிவேணி சங்கமத்தில் சுமார் 70 கோடி பக்தர்கள், துறவிகள், ஸந்நியாசிகள், அகோரிகள், சாதுக்கள் புனித நீராடினார்கள்.

இந்த புனித நிகழ்ச்சியில் ருத்ராபிஷேகமும், ஹோமங்களும், ஜபங்களும், பூஜைகளும் செய்ய காஞ்சி ஸ்ரீசங்கரமடம், காஞ்சி பெரியவாளின் அணுக்கமான பக்தரும், சிஷ்யருமான ஸ்ரீமான் முனீஸ்வர சாஸ்திரிகள் அவர்களை நியமித்தது. இதை பெரும் பாக்கியமாக நினைத்த ஸ்ரீமான் முனீஸ்வர சாஸ்திரிகள் தனது குழுவினர் 15 பேருடன் "ப்ரயாக்ராஜ்" சென்று 60,000 சதுர அடிக்கு யாக சாலை அமைத்து அதில் 07.02.2025 முதல் 13.02.2025 வரை 7 நாட்கள் இந்த மஹா புண்ணிய ஹோமத்தை மிகச் சிறப்பாக நடத்தினார்கள். இந்த புண்ணிய ஹோமத்தில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

**"வேதபாரதி"** அமைப்பின் சார்பாக செயலாளர் ஸ்ரீவெங்கட்ராமன்ஜி அவர்களும் தொடர்ந்து வேதபாரதி அன்பர்கள் கலந்துகொண்டு கைங்கர்யம் செய்தார்கள். இது வேதபாரதிக்கு கிடைத்த பெரும் பாக்கியம்.

**"வேதபாரதி செய்திகள்" புத்தகக் குழு**

## குரோதி வருஷம் - பங்குனி மாத விசேஷங்கள்

**(மார்ச் 15.03.2025 முதல் ஏப்ரல் 13.04.2025 வரை)**

| | | | |
|---|---|---|---|
| *17.03.2025* | பங் *03* | திங்கள் | சங்கடஹர சதுர்த்தி |
| *20.03.2025* | பங் *07* | வெள்ளி | அனுஷம் |
| *25.03.2025* | பங் *11* | செவ்வாய் | ஏகாதசி |
| *27.03.2025* | பங் *13* | வியாழன் | ப்ரதோஷம் |
| *29.03.2025* | பங் *15* | சனி | அமாவாசை |
| *30.03.2025* | பங் *16* | ஞாயிறு | தெலுங்குவருஷ பிறப்பு |
| *01.04.2025* | பங் *18* | செவ்வாய் | கார்த்திகை விரதம், சதுர்த்தி |
| *03.04.2025* | பங் *20* | வியாழன் | ஷஷ்டி |
| *06.04.2025* | பங் *23* | ஞாயிறு | ஸ்ரீ ராமநவமி |
| *08.04.2025* | பங் *25* | செவ்வாய் | ஏகாதசி |
| *10.04.2025* | பங் *27* | வியாழன் | ப்ரதோஷம் |
| *11.04.2025* | பங் *28* | வெள்ளி | பங்குனி உத்திரம் |
| *12.04.2025* | பங் *29* | சனி | பௌர்ணமி |

## 29.03.2025 சனிக்கிழமை அமாவாசை

குரோதி நாம ஸம்வத்ஸரே, உத்தராயணே சிசிர ருதௌ, மீன மாஸே, க்ருஷ்ணபக்ஷே, அமாவாஸ்யாயம் புண்யதிதௌ வாஸர : வாஸரஸ்து ஸ்திர வாஸர யுக்தாயாம் உத்ர ப்ரோஷ்டபதப நக்ஷத்ர யுக்தாயாம், விஷ்ணு யோக விஷ்ணுகரண, ஏவம் குண ஸகல விஸேஷேண விஸிஷ்டாயாம், அஸ்யாம், அமாவாஸ்யாயாம் புண்யதிளெ.

Owned, Published and Printed by **R. VENKATARAMAN,** Printed at **SABANAYAGAM PRINTERS,** 39,Millers Road, Kilpauk, Chennai - 600010 and Published at 27, F1, Annai Indira Nagar, Velachery, Chennai - 600042.
Editor : **R. VENKATARAMAN, 9443495950**

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய,
ஓம் நமோ நாராயணாய.

# ஸ்ரீமத் பகவத்கீதை

D. சூரியநாராயணன் பகுதி - 70

**யோஷ்டாதசஜபோ நித்யம் நரோ நிஸ்சலமானஸ:/**
**ஞான ஸித்தம் ஸ லபதே ததோ யாதி பரம் பதம்//**

உறுதியான உள்ளத்துடன் எந்த மனிதன் நாள்தோறும் பதினெட்டு அத்தியாயங்களையும் ஓதுகின்றானோ, அவன் ஞான சித்தியடைந்து பிறகு பரமபதத்தைச் சேருகிறான்.

## அத்தியாயம் மூன்று
## கர்ம யோகம்...

"ஞானி" எப்படி இருப்பான்?

**தத்த்வவித்து மஹாபா₃ஹோ கு₃ணகர்ம விபா₄க₃யோ:/**
**கு₃ணா கு₃ணேஷு வர்தந்த இதி மத்வா ந ஸஜ்ஜதே//**

**(கீதை 3-28)**

**பொருள் :** ஆனால், பெருந்தோளுடையோய், குணகர்மத்தின் தத்துவ ஞானியோ, குணங்கள் குணங்களில் பிரவர்த்திக்கின்றனவென்று அறிந்து பற்றுவைப்பதில்லை.

**விளக்கம் :** பகவான் அர்ஜுனனை "ஹேமஹாபாஹோ" என்று அழைக்கிறார். "மஹாபாஹோ" என்றால் **one who achieve whatever he wants. one who can create whatever he wants.** எதையும் அடையும் பலம் உள்ளவன். கு₃ணகர்ம விபா₄க₃யோ : **= various qualities of mind.** அதாவது ரஜோ குணம், தமோ குணம், ஸத்வகுணம். நம் மனது தமோ குணத்தில் இருந்தால் நம் செயல் தூக்கத்தில் இருக்கும். மனது ரஜோ குணத்தில் இருந்தால் நாம் **Restless** ஆக இருப்போம். மனது ஸத்வ குணத்தில் இருந்தால் நம்முடைய செயல்கள் பண்புள்ளதாகவும்,

அடக்கமுள்ளதாகவும் இருக்கும். இவற்றை எல்லாம் அறிந்தவன் "தத்வ வித்". அதாவது மனதாகிற வித்து. **"வித்து"** என்றால் **there is possibility to expand.** எல்லா விதைகளும், விளையும் தன்மை உள்ளவை. அதுபோல் நம்முடைய மனதில் உள்ள விதைகளாகிய நம்முடைய மூன்று குணங்களும் அந்த குணங்களுக்கு உள்ள தன்மைபோல் நம் உடம்பை **Activate, expand** செய்யும். நம்முடைய மனதால் இந்த குணங்களை மாற்றிக் கொள்ள முடியும்.

ஆதலால், அர்ஜுனா, மனதை திடமாக வைத்துக்கொண்டு, மனதை பறிகொடாமல், பற்றுதலையும், ஆசாபாசத்தையும் விலக்கி கர்மாவை உன் கடமையாக கருதிச் செய்தால் நீ முக்தனாவாய்" என்கிறார் பகவான் ஸ்ரீகிருஷ்ணர்.

அடுத்த ஸ்லோகத்தில் ஞானிகளான மஹாபுருஷர்களுக்கு உள்ள பொறுப்பு குறித்து விளக்குகிறார்.

**ப்ரக்ரு தேர்கு$_3$ணஸம்மூடா$^4$ ஸஜ்ஜந்தே கு$^3$ணகர்மஸு/**
**தானக்ருத்ஸ்னவிதோ$^3$ மந்தா3ன்க்ருத்ஸ்னவின்ன விசாலயேத்//**

*(கீதை 3-29)*

**பொருள் :** பிரகிருதியில் உண்டான குணங்களால் மிக்க மயக்கம் அடைந்துள்ள மனிதர்கள் குணங்களிலும் கர்மங்களிலும் ஈடுபடுகிறார்கள். முற்றும் அறிந்திராத குறைமதியுடைய அந்த அஞ்ஞானிகளை முழுமையான அறிவு பெற்றுள்ள ஞானி தடுமாறச் செய்யலாகாது.

விளக்கம் : முழுமையான ஞானம் இல்லாத பகுத்தறிவில்லாத மூடர்களை ஞானிகள் தாங்கள் அறிந்த, உணர்ந்தவற்றை எடுத்துக்கூறி அவர்கள் மனம் கலங்கும்படி செய்யக்கூடாது.

நாம் எந்த கர்மம் செய்தாலும் அதை சரி என்றுதான் நினைப்போம். நாம் செய்ததை தவறு என்று

அவ்வளவு சீக்கிரம் ஒப்புக்கொள்ளமாட்டோம். திருடன் கூடதான் செய்த திருட்டை தவறு என்று ஒப்புக்கொள்ளமாட்டான். அவனுக்கு அவன் செய்த கர்மம் சரி என்றுதான் தோன்றும். ஒரு குற்றவாளியைக் கேட்டாலும் அவன் செய்த குற்றத்தை நியாயப்படுத்துவான். ஆனால் நமக்கு அவர்கள் செய்தது தவறு என்று தோன்றும். ஆதலால் அடுத்தவர்கள் செய்த தவறைநேரிடையாக நாம் எதிர்க்கக்கூடாது. மாறாக நாம் அவர்களை உயர்த்த வேண்டும்.

இராமாயணத்தில் வரும் **"வால்மீகி முனிவர்"** முதலில் **"ரத்னாகரன்"** என்ற திருடனாகத்தான் இருந்தார். அவர் திருடனாக இருக்கும்போது அவரை **"நீ ஒரு திருடன்"** என்று ரிஷிகள் கூறவில்லை. அவருடைய வழியிலேயே போய் அவரைத் திருத்தினார்கள். அவரும் திருந்தி வால்மீகி முனிவரானவர்.

நாமும் மனதளவில் பலவீனமானவர்கள்தான். அதனால் நாம் சமபுத்தியோடு இருந்து மற்றவர்களையும் சமபுத்தி அடையச் செய்ய வேண்டும். அர்ஜுனன் யுத்த பூமியில் **"சண்டை போடமாட்டேன்"** என்றவுடன் பகவான் அவனை குறைகூறவில்லை. "அர்ஜுனா நீ சண்டை போடமாட்டேன் என்பவர்கள் எனக்கும் உறவினர்கள்தான். ஆனால் நான் உன்னைப்போல் தளரவில்லை" என்றார்.

இதிலிருந்து நாம் தெரிந்துக்கொள்ள வேண்டியது, முதலில் நாம் நம்மை உயர்த்திக்கொண்டு பிறகு மற்றவர்களை உயர்த்த வேண்டும்.

அடுத்த ஸ்லோகத்தில் பகவான் அர்ஜுனனிடம் தன்னிடம் மனதை வைக்க சுலபமான வழியைக் கூறுகிறார்.

தொடரும்.....

# ஸ்ரீமத் பாகவதம்

(ஸத்யம் பரம் தீமஹி)

பரிதி பகுதி - 48

## ஸ்கந்தம் – 5

## “ஜடபரதர்” சரித்திரம்

அடுத்ததாக ஜடபரதன் சிக்கிக்கொண்டது ஒரு அரசனிடத்தில்

ஒரு சமயம், சிந்து **“ஸௌவீர”** தேசத்தின் அரசன் **“ரஹூகுணன்”** கபில முனிவரிடம் உபதேசம் பெறுவதற்காக **“இக்ஷுமதி”** நதிக்கரை வழியாக பல்லக்கில் சென்றுகொண்டிருந்தான். அந்த பல்லக்கை தூக்கிச் சென்ற நான்கு சேவகர்களில் ஒருவனுக்கு உடல்நிலை சரியில்லாமல் போனதால், வேறு ஒரு நபரைத் தேடவேண்டிய நிலை ஏற்பட்டது.

அப்போது அந்த வழியாக ஜடபரதன் வந்துகொண்டிருந்தான். கட்டுமஸ்தான உடலைக் கொண்ட ஜடபரதனைக் கண்டதும், அரசனின் ஆட்கள் ஜடபரதனை பல்லக்குத் தூக்கியாக வேலைக்குச் சேர்த்துக்கொண்டார்கள். சொந்தமாக மனத்தில் எந்த எண்ணமும் எழும்பாத ஜடபரதன், பேசாமல் பல்லக்கை தூக்கலானார். வழியில் செல்லும் எறும்பு முதலிய ஜீவன்களை மிதிக்காமல் இருக்க பார்த்து பார்த்து அடி எடுத்துவைத்தார். அதனால் பல்லக்கு அங்கும் இங்குமங்குமாக அலைந்தது அதனால் பல்லக்கின் வேகம் குறைந்தது.

பல்லக்கின் உள்ளே அமர்ந்திருந்த அரசன் பணியாட்களை ஒழுங்காகச் செல்லும்படி அதட்டினான். அப்போது மற்றசேவகர்கள் “அரசே இது எங்கள் தவறன்று, நாங்கள் ஒழுங்காகத்தான் தூக்குகிறோம். புதிதாய் வந்த மனிதன்தான் கோணலாக

*நடக்கிறான்" என்று ஜடபரதரைக் குற்றம் சாட்டினார்கள்.*

*அரசன் ஜடபரதனை நோக்கி கேலியாக "தம்பி! ரொம்ப பரிதாபம் தன்னந்தனியாக வெகுதூரம் பல்லக்கை தூக்கி களைச்சிட்டிங்க. வயசாயிடுச்சி, உடம்பு வேறநோஞ்சானா இருக்கு. உதவி ஏதாவது வேணுமா?" என்று ஏளனம் செய்தான்.*

*அரசன் ஏளனம் செய்ததை சற்றும் பொருட்படுத்தாத ஜடபரதன் பதிலேதும் சொல்லாமல் பல்லக்கைத் தொடர்ந்து தூக்கினார். அவரது செய்கையில் மாற்றமில்லை. அதனால் பல்லக்கின் கட்டை அரசனின் தலையில் இடித்தது. உடனே அரசன் மிகுந்த கோபத்தில் ஜடபரதரை நோக்கி "அடேய்! நான் சொல்லியும் கவனிக்காது உன் போக்கில் போகிறாய். அரச கட்டளையை மீறும் அளவிற்கு துணிச்சலா? நீ பைத்தியமா? குண்டனான உனக்கு தண்டனை கொடுத்தால்தான் வழிக்கு வருவாயா? என கத்தினான்.*

*அரசன் இப்படி கத்தியதும் ஜடபரதன் "அரசே! நீ கூறியதெல்லாம் உண்மைதான். பாரம் என்பது சுமப்பவனுக்கல்லவா? நான் நடக்கவே இல்லை. ஒரே இடத்தில்தான் நிற்கிறேன். பருமன், இளைத்து போவது, நோய்கள், மனோவியாதிகள், பசி, தாகம், பயம், விருப்பு, மூப்பு, உறக்கம், துக்கம், இவை எல்லாம் சரீரத்திற்கு இருப்பது. காமம், கோபம், துவேஷம், அஹங்காரம், இவை எல்லாம் மனதிற்கு இருப்பவை. இந்த சரீரமும் நான் அல்ல, இந்த மனதும் நான் அல்ல. அபிமானற்ற எனக்குக்கிடையாதல்லவா? உயிருடன் இருப்பதும், இறப்பதும் ஜீவன்களுக்கும் உண்டு. எஜமானன், பணியாள் என்று இருவர் இருக்கும் இடத்தில்தான் கட்டளை செல்லுபடியாகும். இங்கு நீ*

*நான் என்ற வேற்றுமை இல்லை. அனைத்தும் ஸத்யமான பொருளே. நீ அரசன், நான் அடிமை என்ற வேற்றுமை எண்ணம் உனக்கிருப்பதால் நீ கட்டளை இடுகிறாய். இவ்வேற்றுமை இல்லாத நான் உனக்கு என்ன பணி செய்ய வேண்டும்?" என்று கூறிவிட்டு தொடர்ந்து பல்லக்கை தூக்கினார். (ஸ்ரீமத் பாகவதம் ஸ்கந்தம் 5-10-9முதல்13)*

*ஜடபரதர் இப்படி கூறியதைக் கேட்ட அரசன், தான் அரசன் என்ற செருக்கை விட்டு விட்டு பல்லக்கை நிறுத்தச்சொல்லிக் கீழே இறங்கி ஜடபரதருடைய திருவடிகளில் விழுந்து நமஸ்கரித்து "ஐயா! அடியேன் அறியாமல் செய்த குற்றத்தை மன்னித்தருள வேண்டும். தேவரீர் தாங்கள் யார்? என்று தெரியவில்லை. அந்தணர்க்குரிய பூணூலை அணிந்திருக்கிறீர்கள். இங்கு யாது காரணம் பற்றி வந்துள்ளீர்கள். என்னுடைய நலத்திற்கு என்றால் நான் தேடிபோகும் கபிலமுனி தாங்கள்தான். எனக்கு வாசுதேவ தத்துவத்தைச் சொல்லிக் கொடுங்கள்" என்று கேட்கிறான்.*

*அரசன் இப்படி வேண்ட ஜடபரதர்* **"ரஹூகுண"** *ராஜாவிற்கு பதில் அளிக்கும் விதத்தில் ஆத்மதத்துவத்தை (ஆத்மாவின் உண்மையைப்பற்றி) உபதேசிக்கிறார்.*

**(குறிப்பு :** *ஜடபரதரின் ஆத்மதத்துவம் ஸ்ரீமத் பாகவதத்தில் 5ஆவது ஸ்கந்தத்தில் அத்தியாயம் 12ல் ஸ்லோகம் 5 முதல் 16 வரையிலும் மற்றும் அத்தியாயம் 13ல் ஸ்லோகம் 1 முதல் 20 வரையிலும் ஆக 32 ஸ்லோகங்களில் விவரிக்கப்பட்டுள்ளது. இந்த தத்துவங்கள் நாமும் கடைபிடிக்க வேண்டியவை) ஜடபரதரின் ஆத்ம தத்துவங்கள் அடுத்த மாதம்...*

*ஸ்ரீமத் பாகவதம் தொடரும்...*

அத்வைத ஆசான்

# ஸ்ரீ ஆதிசங்கரர்

**ஆதவன்** **பகுதி 40**

## அத்தியாயம் 17
## (சிருங்ககிரியும் சாரதாதேவியும்)

**"ஸ்ரீ பலி"** கிராமத்திலிருந்து கிளம்பிய ஸ்ரீசங்கரரும் அவருடைய சிஷ்யர்களும் துங்கபத்ரா நதி கரையோரமாக நடந்து **"சிருங்ககிரி"** (சிருங்கேரி) சென்றடைந்தார்கள். துங்கபத்ரா நதியும், சிருங்கேரியும் சேர்ந்து அந்த இடமே மிகவும் ரம்யமாக இருந்தது. துங்கபத்ரா நதியின் ஜலம் குடிப்பதற்கு மிகவும் ருசியாக இருக்கும். அதனால்தான் **"கங்கா ஸ்நானம், துங்கா பானம்"** என்று கூறுவார்கள்.

(ஸ்ரீசங்கரர் **"சிருங்ககிரி"** வருவது இது இரண்டாவது முறை. முதல் முதலில் அவர் காலடியிலிருந்து தன் குருவை தேடி புறப்பட்டபோது இந்த ச்ருங்ககிரி வழியாகத்தான் சென்றார். (முதன் முறையாக ஸ்ரீ சங்கரர் சிருங்ககிரி வந்த விவரம் பிப்ரவரி 2023 **"வேதபாரதி செய்திகள்"** இதழில் விரிவாக எழுதியுள்ளேன்)

சிருங்ககிரியை அடைந்த ஸ்ரீ சங்கரரும் சிஷ்யர்களும், துங்கபத்ரா நதிகரையில் தங்குவதற்கு சிறிய சிறிய குடில்களை அமைத்துக் கொண்டார்கள். ஸ்ரீசங்கரர் தங்குவதற்கு ஒரு பர்ணகுடீரம் அமைத்தார்கள்.

ஸ்ரீ சங்கரர் தன் சிஷ்யர்களுக்கு உபநிஷத் பாடங்கள் நடத்தினார். ஒரு நாள் தன் சிஷ்யர்களுக்கு தான் முதலில் சிருங்ககிரி வந்தபோது தவளையும், ஸர்பமும் நட்பாக இருந்ததைக் கண்ட இடத்தை காண்பித்துக் கொடுத்தார்.

கிருங்கேரியின் அமைதியான சூழ்நிலையை ரசித்த பத்மபாதர் போன்ற சிஷ்யர்கள் ஸ்ரீசங்கரரிடம் “நாம் இங்கு ஒரு மடம் நிறுவி இங்கேயே தங்கலாமா?” என்று கேட்டார்கள். அதற்கு ஸ்ரீசங்கரர் “பத்மபாதா, இங்கு மடம் நிறுவி இங்கேயே நிம்மதியாக, இருக்கலாம் என்று நினைப்பது அஞ்ஞானமே. மடநிர்மாணத்தில் இறங்க வேண்டாம். **“சரைவேதி சரைவேதி”** எங்கும் நிற்காமல் நடந்துகொண்டே இரு” என்பதே எதியின் நியதி. நான் உங்களுக்கு ஒரு வழி கூறுகிறேன். சித்சக்திரூபிணியான ஜகதம்பிகையை நாம் இங்கு பிரதிஷ்டை செய்வோம். **“சாரதா க்ஷேத்ரம்”** நிர்மாணம் செய்வதற்கு ஏற்பாடுகளைச் செய்யுங்கள். யதிகள், தங்குவதற்கு குடீரங்கள் அமையுங்கள்” என்றார்.

ஸ்ரீசங்கரரின் உபதேசத்தைக் கேட்ட பத்மபாதர் முதலானோர் பக்தர்களின் கைங்கர்யத்தால் ஸ்ரீசாரதாக்ஷேத்திரம் (ஸ்ரீசாரதா பீடம்) உருவாக்கி ஸ்ரீ யந்திரத்தை பிரதிஷ்டை செய்தார்கள். வைதீக ப்ராஹ்மணர்கள் வந்து அபிஷேகம் செய்தார்கள். தேவி பிரதிஷ்டை மங்களகரமாக நடந்தது.

(மண்டனமிச்ரர் அத்தியாயத்தின் முடிவில் ஸ்ரீசங்கரரும் சுரேசுவரரும் முன்னே நடந்து செல்ல தொலைவில் பின்னால் ஸரஸவாணி நடந்து வருவாள். அவள் வருகிறாள் என்பதற்கு அறிகுறியாக அவள் பாதச் சிலம்புகளின் ஒலி கேட்கும். அவள் தொடர்ந்து வருகிறாளா என்பதை தப்பித் தவறி கூட ஸ்ரீசங்கரர் திரும்பி பார்க்கக்கூடாது. அப்படி பார்த்தால் அந்த இடத்திலேயே தான் தங்கிவிடுவதாக ஸரஸவாணி கூறியிருந்தாள். அப்படி அவள் தங்கிய இடம்தான் சிருங்ககிரி. அவளே அன்னை சாரதாதேவி என்ற பெயரில் அங்கு வீற்றிருக்கிறாள்)

ஸ்ரீ சங்கரர் ஸ்ரீசாரதாம்பாள் ஸன்னிதியில் ஸ்ரீசாரதாம்பாளை உள்ளம் கவரும் ஒரு ஸ்தோத்திரத்தால் ஸ்துதித்தார். அதுவே 8 ஸ்லோகங்களைக் கொண்ட **"ஸ்ரீசாரதா புஜங்க ஸ்தோத்ரம்".** இந்த ஸ்தோத்ரத்தை பாடி முடித்ததும் ஸ்ரீ சங்கரர் தன் சிஷ்யர்களிடம் "அவளின் சரீரமே **"சித்ரஸபரிபூர்ணமாக''** உள்ளது. அவளை ஆச்ரயிப்பவர்களுக்கு உத்தம வித்யாஸ்பூர்த்தி உண்டாகும். நாமும் முற்றும் துறந்தவர்களானாலும், நமக்கு அவள் தாயாரே **"பஜே ஸாரதாம்பாம் அஜஸ்ரம் மதம்பாம்"** என்று கூறிய ஸ்ரீசங்கரர் "பிற்காலத்தில் இந்த இடம் ஒரு நகரம் போலாகிவிடும்" என்றார்.

யாத்திரை தொடரும்...


**Er. D.A. Devapaull**
Managing Director

**D.A. Devapaull**
DPT, Trainer


**STAR BUILDERS AND DEVELOPERS**
*... we build your dreams*

C-95, Thally Hudco
Hosur - 635 109.
starbuildershosur@gmail.com

**STAR GYM & FITNESS CENTRE**

#2, Renuga Devi Complex,
ESI Ring Road,
Muniswar Nagar,Hosur.

**We are specialised in :**
Industrial & Commercial Buildings
Residential Buildings, Apartments & Villas
Road Works & Layout
Approval Drawings & Structural Design
Star Earth Movers & Constriction Material Suppliers

- Weight Loss
- Weight Gain
- Fitness Training
- Strength Training
- TRX Training

**Cell : 94421 02057 / 70106 23102**

## ஔவையார்

(பழமையான அறக்கருத்துக்களைக் கொண்டது)

### வெண்பா 30




**சாந்தனையும் தீயனவே செய்திடினும் தாம் அவரை**
**ஆந்தனையும் காப்பர் அறிவுடையோர் – மாந்தர்**
**குறைக்கும் தனையும் குளிர் நிழலைத் தந்து**
**மறைக்குமாம்த கண்டீர் மரம்.**

**பொருள் :** தன்னை வெட்டுபவனுக்கும் நிழலைத் தந்து காக்கும் மரத்தைப் போல, அறிவுடையார் அவர்தம் உயிருக்கே தீங்கு செய்பவனையும் இயன்றவரைக் காக்கவே செய்வர்.

**விளக்கம் :** இந்த பாடலில் ஔவையார் அறிவுடையோரின் குணத்தை மரத்தின் மகிமையோடு ஒப்பிடுகிறார். பாடலின் முதல் வரியின் ஆரம்பத்தில் **“சாந்தனையும்”** என்றும், இரண்டாவது வரியின் ஆரம்பத்தில் **“ஆந்தனையும்”** என்று ஆரம்பிக்கிறார். இவற்றின் பொருள் = **“தனை”** என்றால் **“வரை”** என்று பொருள். அதாவது **“சாந்தனை”** என்றால் **“சாகும்வரை”** என்றும், **“ஆந்தனை”** என்றால் **“ஆகும்வரை”** **“இயன்றவரை”** அல்லது **“ஆகும்வரை”** என்று பொருள்.

தற்போது பாடலின் விளக்கத்தைப் பார்ப்போம்.

மனிதர்களாகிய நாம் ஆறு அறிவு படைத்தவர்கள். ஆனால் மரம் ஓர் அறிவு படைத்தது. ஓர் அறிவு படைத்த மரமே தன்னை வெட்டுகிறவர்களுக்கு குளிர்ச்சியான நிழலைத் தருகிறது. “நீ என்னை வெட்ட வருகிறாய் நான் எதற்கு உனக்கு நிழல் தரவேண்டும்?” என்று கேட்காது. கடைசி கிளையை வெட்டும் வரையிலும் நிழல் தந்துகொண்டே இருக்கும்.

அதேபோல நல்ல பண்பும் அறிவும் உடைய மனிதர்கள் தங்களுக்கு யாராவது சாகும்வரையிலும் தீங்கு செய்தாலும், அவர்களுக்கு எந்த தீமையும் செய்யமாட்டார்கள். தனக்கு தீமை செய்பவர்களை கடைசி வரை காத்து நிற்பார்களாம்.

இந்த பாடலில் நன்மக்களின் இயல்பைக் காட்டுகிறார் ஔவையார்.

அருமையான இந்த பாடலோடு ஔவை தனது மூதுரையை நிறைவு செய்கிறார்.

ஔவையார் முத்தான முப்பது வெண்பாக்களிலும் சொல்லிய நல்ல கருத்துக்களை நாமும் கற்போம். நம் குழந்தைகளுக்கு கற்பித்து நல்ல சமுதாயத்தை உருவாக்குவோம்.

இந்த மாதத்துடன் ஔவையாரின் "மூதுரை" முடிவடைகிறது. அடுத்த மாதம் ஔவையார் பாடிய "நான்கு கோடி பாடல்கள்" இந்த பகுதியில் இடம்பெறும்.

தொகுப்பு : **பரிதி**


இந்தப் பகுதி தொடர்ந்து வெளிவர ஆதரவு தருபவர்

**ப்ரம்மஸ்ரீ முனீஸ்வர சாஸ்திரிகள்,**

வேளச்சேரி

ஹரி ஓம்
ஸ்ரீ குருப்யோ நம:

**வேதபாரதி**

**யோகா வகுப்புகள்** (30 நிமிடங்கள்)

**வாரம் 2 நாட்கள் by Online**

**செவ்வாய், வியாழன் – காலை 6.00 மணி**
**சனி, ஞாயிறு – காலை 6.00 மணி**

ஆசிரியர் : யோகாச்சாரியார் **ஸ்ரீ J. சந்திரசேகர் ஜி**
திருச்சி

**யோகாவில் இணைவோம் உடல் மனம் புத்துணர்ச்சி பெறுவோம்**

தொடர்புக்கு :

**9443495950 / 9443453053**

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய



# ஸ்ரீ குருவாயூர் கோயில் வரலாறும் மஹிமைகளும்

நாராயணன் பகுதி 6

## அத்தியாயம் – 3
## கோவிலின் தோற்றம், வளர்ச்சியும்

17.09.1792-ம் தேதி மூல விக்ரஹம் திரும்பவும் பிரதிஷ்டை செய்யப்பட்டது. ஆனால் நித்திய பூஜைகளும், சடங்குகளும் செய்வதில் சிக்கல் ஏற்பட்டது. அதனால் உள்ளூர் பொதுமக்களே கோவிலை காப்பாற்றி பாதுகாத்து வந்தனர்.


1825 ஆம் ஆண்டு அஷ்டபந்தனக் கும்பாபிஷேகம் நிறைவேறியது. 1859 முதல் 1892 வரையிலும் கோவிலின் பல பகுதிகள் புதுப்பிக்கப்பட்டு அதன் கூரைகள் செம்பு தகடுகளால் மாற்றியமைக்கப் பெற்றன.

1900 ஆம் ஆண்டு பிரிட்டிஷ்காரர்களின் சட்டத்தின்படி **"கேந்திமேனோன்"** என்பவர் பக்தர்களுக்கு தேவையான பல வசதிகளையும் செய்தார்.

1930ஆம் ஆண்டு சென்னை நீதிமன்றத்தின் சட்டப்படி தேவஸ்தானத்தின் நிர்வாகப் பொறுப்புகள் சாமுதிரி ராஜா மல்லிசேரி அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

*1947ஆம் ஆண்டு மலபார் கோவில்கள் எல்லாம் இந்து பக்தர்களுக்காக திறந்துவிடப்பட்டது. அதன் பின் குருவாயூர் கோவிலுக்கு வரும் பக்தர்களின் கூட்டம் அதிகமானது.*

**கோவிலில் தீ விபத்து :** *30.11.1970 அன்று பிரசித்திப் பெற்ற வருடாந்திர ஏகாதசி விழாவின் 6வது நாள் இரவு சுற்று விளக்குகள் (லட்சதீபம்) ஏற்றப்பட்டு வெகுவிமரிசையாக கொண்டாடப்பட்டு மற்ற சடங்குகள் முடிவு பெற்று கோவிலின் கதவுகள் தாளிடப்பட்டன. விடியற்காலை 1.00 மணியளவில் மேற்கு சுற்றம்பலத்தின் அருகாமையில் இருந்த யாரோ ஒருவர் கோவிலுக்குள் தீ எரிவதை காண நேர்ந்தது. தகவல் பரவியவுடன் வயது, ஜாதி, மதம் ஆகிய வேறுபாடுகளைப் பொருட்படுத்தாமல் ஏராளமான மக்கள் தீயை அணைக்க போராடினர். பின்னர் தீயணைப்பு வீரர்கள் வந்து தீயை அணைக்க ஆரம்பித்தனர். தீ தொடர்ந்து 5 மணி நேரம் எரிந்து மேற்கு, தெற்கு மற்றும் வடக்குப் பகுதியிலுள்ள எல்லா விளக்கு மாடங்களையும் எரித்து சாம்பலாக்கிவிட்டது. அதிகாலை 5.30 மணிக்குள் தீ கட்டுப்படுத்தப்பட்டது.*




*இந்த தீ விபத்தில் ஒரு அதிசயம். தீ 5 மணி நேரம் தொடர்ந்து கொழுந்துவிட்டு எரிந்தும் மூல விக்ரஹம், விநாயகர், ஐயப்பன், தேவி ஆகியோரின் துணை சன்னதிகள், கொடிமரம் ஆகியவற்றுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை. ஸ்ரீகோவில் பலிபீடத்தின்*

*மூலையில் பகவானுக்கு சார்த்திய மாலை (உலர்ந்து) தொங்கிக்கொண்டிருந்தது. ஆனால் உலர்ந்த மாலையை தீ தீண்டவில்லை.*

*கோவிலை புதுப்பிக்கும் பணிகளை மேற்கொள்ள இரண்டு குழுக்கள் அமைக்கப்பட்டன. இதில் புகழ்பெற்ற பொறியாளர்கள், ஜோதிடர்கள் மற்றும் தாந்த்ரீகர்கள் இருந்தனர்.*

*01.05.1971 அன்று காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீஸ்ரீஸ்ரீஜகத்குரு ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் கோவில் புனர் நிர்வாகத்திற்கு அடிக்கல் நாட்டினார்.*

*தொடரும்...*

---

## திருமண வாழ்த்து

*26.01.2025 அன்று ஞாயிற்றுக்கிழமை நமது ஊரப்பாக்கம் அமைப்பின் உறுப்பினர் ஸ்ரீமதி.ஜெயந்தி சங்கர நாராயணன் அவர்களின் புதல்வன்*

திருநிறைச்செல்வன்.**பரத்வாஜ்** மற்றும்

திருநிறைச்செல்வி.**ஸ்ருதி**

*தம்பதியரின் திருமண விழாவானது சேலத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அதனைத்தொடர்ந்து சென்னையில் வரவேற்பு விழாவும் சிறப்பாக நடைபெற்றது. இதில் வேதபாரதி அமைப்பின் சார்பாக ஊரப்பாக்கம் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு தம்பதிகளை வாழ்த்தினார்கள்.*

## வேதவகுப்பு

*வேதவகுப்புகள் சேர்வதற்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்*

94451 02193 / 9994926537 / 98402 01625

*வார இறுதி நாட்கள் யஜுர் வேத வகுப்பு ஆரம்பமாகி உள்ளது. இணைந்து பயன்பெற வேண்டுகிறோம்.*

# ஸ்ரீ மத்ஸ்ய ஜயந்தி



முந்தைய கல்பத்தின் முடிவில் நைமித்திகம் என்னும் பிரளயம் உண்டாயிற்று. பிரளய ஜலத்தில் சகல லோகமும் மூழ்கின.

பிரளயம் முடிந்து உலகம் சகஜ நிலையை அடைந்தபோது பூபாகம் மேலெழுந்து சூரியன் தோன்றியது. **"பிரம்மா"** தன் படைப்புத் தொழிலை ஆரம்பித்தார். ஆனால் அதற்கான சக்தி அவரிடம் ஏற்படவில்லை. காரணம் பிரம்மாவிடமிருந்து வேதங்களை **"சோமுகாசுரன்"** (அயக்ரீவன்) என்னும் அரக்கன் அபகரித்துச் சென்று சமுத்திரத்தின் அடியில் ஒளிந்து கொண்டான். வேதங்கள் இன்றி சிருஷ்டி காரியத்தை நடத்த இயலாத **"பிரம்மா"** பகவான் ஸ்ரீ மஹாவிஷ்ணுவை தியானித்து வேதங்களை மீட்டுத்தர வேண்டினார்.

பிரம்மாவின் வேண்டுகோளை ஏற்றஸ்ரீ மஹாவிஷ்ணு மத்ஸ்யமாக (மீனாக) அவதாரம் எடுத்து கடலில் ஒளிந்திருந்து **"சோமுகாசூரன்"** என்னும் அரக்கனை போரில் வதம் செய்து வேதங்களை மீட்டு பிரம்மாவிடம் ஒப்படைத்தார்.

ஸ்ரீ மஹாவிஷ்ணு மத்ஸ்யமாக அவதாரம் எடுத்து வேதங்களை மீட்ட நாளை **"மத்ஸ்ய ஜயந்தி"** என்று (சித்திரை மாதத்தில் வரும்) கொண்டாடுவது மரபு.

**"சத்தியவிரதன்"** என்ற அரசனுக்கும் அவனைப் போன்ற மற்ற பக்தர்களுக்கும் பிரம்ம ஞானத்தை

உபதேசிப்பதற்காகவும் இந்த மத்ஸ்யாவதாரம் காரணமாக இருந்தது என ஸ்ரீமத் பாகவத புராணம் இயம்புகிறது.

பகவான் மஹாவிஷ்ணு எடுத்த பத்து அவதாரங்களில் முதல் அவதாரம் **"மத்ஸ்ய அவதாரம்".** பகவானுக்கு மிகவும் பிடித்த அவதாரம் இது.

மத்ஸ்யாவதார கோலத்திலேய திருக்கோயில் கொண்டு அருள்புரியும் திருமால் ஆலயத்தை ஆந்திர மாநிலத்தில் உள்ள "நாகலாபுரம்" என்னும் ஊரில் காணலாம். மத்ஸ்ய அவதாரத்திலேயே மூலவராக தனி சந்நிதி கொண்டு அருள்புரிவது இங்குமட்டுமே. 16 ஆம் நூற்றாண்டில் விஜயநகர மன்னர் கிருஷ்ண தேவராயரால் அவரின் தாயாரின் நினைவாக இக்கோயில் கட்டப்பட்டதாக சரித்திரம் கூறுகிறது.

இத்தலம் திருப்பதிக்கு தென்கிழக்கே 70 கி.மீ. தொலைவில் உள்ளது. சென்னை பெரியபாளையம் அடுத்துள்ள **"சுருட்டப்பள்ளி"** சிவன் கோயிலிலிருந்து சுமார் 12 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. திருத்தணியிலிருந்தும் செல்லலாம். ஆன்மீக அடியார்கள் அவசியம் தரிசிக்கவேண்டிய திருத்தலம் இது.



விழுப்புரம் மாவட்டம் திருக்கோவிலூர் அருகே தென்பெண்ணையாற்றின் தென்கரையில் "ஆதி

திருவரங்கம்” என்றஒரு ஊர் உள்ளது. இங்கு ஒரு பெருமாள் கோயில் உள்ளது. இங்குதான் பெருமாள் வேதங்களை கொண்டுவந்து, பிரம்மாவுக்கு கொடுத்தார் என்று புராணம் கூறுகிறது.

சமீபத்தில் சென்னையில் கடற்கரை சாலையில் **(ECR ROAD)** மத்ஸ்ய நாராயண பெருமாள் கோயில் ஒன்று உருவாகியுள்ளது. இது தமிழக மக்களை மிகவும் கவர்ந்துள்ளது.

இந்த வருடம் “மத்ஸ்ய ஜெயந்தி” 31.03.2025 திங்கட்கிழமை அன்று நிகழவுள்ளது. அன்றைய தினம் பகவான் மஹாவிஷ்ணுவை 16 உபசாரபூஜை செய்து அதற்கான மந்திரத்தைச் சொல்லி அர்க்கியம் கொடுக்கலாம்.

**D. சூரியநாராயணன்**

## திருமண வாழ்த்து

வேதபாரதியின் தொடக்க காலம் முதல் பயணம் செய்து வரும் வேதபாரதிக்கு விலாசம் வழங்கியவரும், மேற்கு மாம்பலம் ஸ்ரீ கண்ணன் – ஸ்ரீமதி சுகந்தி கண்ணன் குமாரன்

**சிரஞ்சீவி. தீட்சித் ராம்பத்ரனுக்கும்**

சென்னை, ஸ்ரீசுந்தரசேன் – ஸ்ரீமதி ஸ்வர்ணா அவர்களின் குமாரத்தி


**சௌபாக்யவதி. சௌம்யா லட்சுமி**

இருவருக்கும் திருமணம் 16.02.2025 ஞாயிற்றுக்கிழமை துரைப்பாக்கம் A.P.L. குளோபல் பள்ளியில் மிக விமர்சையாக நடந்தது. வேதபாரதியின் சார்பில் திரளான நண்பர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள். மணமக்கள் எல்லா சௌபாக்யமும் பெற்று வாழ வாழ்த்துகிறோம்.


Rs.1000 inclusive of tax
Wopper
COMBO OFFER
This pack contains:
Liquid Detergent 1 L - 1 No
Floor Cleaner 500 ml - 2 Nos
Toilet Cleaner 500 ml - 2 Nos
Fabric Conditioner 500 ml - 1 No
Vessel Wash 500 ml - 1 No
Multipurpose Cleaner 100 ml - 1 No
Hand Wash 100 ml - 1 No
Hand Rub 100 ml - 1 No
FREE
Contact
9952972436 / 7824807801
Shri Meera Labs Pvt Ltd
Our Chemistry ... Your Success
WOPPER
Fluid Chemistry

## மஹா பெரியவாளின் அற்புத விளக்கங்கள்

# மதமாற்றம் தேவையில்லை



ரயில்வே ஸ்டேஷனில் பயணிகள் வந்து இறங்கியதும் ஜட்காக்காரன், ரிக்ஷாக்காரன், டாக்சிக்காரன் என்று பலர் வந்து சூழ்ந்து கொள்கிறார்கள். யாருடைய வண்டியில் ஏறினாலும் போகவேண்டிய இடத்துக்குப் போய்ச் சேரலாம். வாடிக்கையாளர்களைப் பிடிப்பதற்காக வண்டிக்காரர்கள் போட்டி போடுவது அவர்கள் பிழைப்பு. ஆனால், கடவுள் என்றஒரே லட்சியத்துக்கு அழைத்துச் செல்வதற்காக வெவ்வேறு மதஸ்தர்கள் போட்டி போட்டுக்கொண்டு மதமாற்றத்தில் முனைவது அர்த்தமற்றசெயல்.

நதியின் மேல் பாலம் போடப்பட்டிருக்கிறது. அதில் பல வளைவுகள் இருக்கின்றன. எல்லா வளைவுகளும் ஒரே அளவாகக் கட்டப்பட்டவைதாம். ஆனால், ஒவ்வொரு வளைவுக்கும் அருகே இருப்பவனுக்கு அந்தந்த வளைவே பெரிதாகவும், மற்றவை சிறியதாகவும் காட்சி தரும். இப்படியே அந்தந்த மதஸ்தர்களுக்கும் தங்கள் மதமே பெரிதாகத் தெரிவதால், பிறரை அதற்கு அழைக்கிறார்கள். ஆனால், எல்லா வளைவுகளும் ஒரே அளவுதான். எனவே, யாரும் தாங்கள் பிறந்த மதத்தைவிட்டு விலக வேண்டியதில்லை.

# AURO MIRA MEDI AIDS

*House of Home Healthcare Products*


- Breast Pumps
- Blood Glucose Meters
- BP Meters
- Alpha Beds
- Adult Diapers
- Under Pads
- Wheel Chairs
- Physio Products
- Home Sleep Study
- Oxygen Concentrator
- CPAP / Bi Pap
- Pulse Oxymeters
- Nebuliser
- Morning Walker
- Weighing Scale
- Air Purifier




முதியோர்களை சிறப்பாக பராமரிக்க தேவையான மருத்துவ உபகரணங்கள் எங்களிடம் சலுகைவிலையில் கிடைக்கும்.

#174, 26th East Street, Kamaraj Nagar,
Tiruvanmiyur, Chennai - 600 041.
**9382159199 | auromiramediaids@gmail.com**
**www.auromiramediaids.in**

# கோ$^{4}$ரகஷ்ட நிவாரண ஸ்தோத்ரம்




பரமபூஜ்ய ஸ்ரீ ஸ்ரீ வாஸுதேவானந்த ஸரஸ்வதி (தேம்பே ஸ்வாமி) மஹாஸ்வாமிகள் அருளிய இந்த ஸ்தோத்திரத்தை பாராயணம் செய்தால், சகல கஷ்டங்களும் நிவாரணம் ஆகும் என்பது அனுபவத்தில் கண்ட உண்மை.

ஸ்ரீபாத$^{3}$ ஸ்ரீவல்லப$^{4}$ஸ்த்வம் ஸதை$^{3}$வ |
ஸ்ரீத$^{3}$த்தா, ஸ்மான்பாஹி தே$^{3}$வாதி$^{4}$தே$^{3}$வ ||
பா$^{4}$வக்$^{3}$ராஹ்ய க்லேஸஹாரின், ஸுகீர்தே |
கோ$^{4}$ராத், கஷ்டா, து$^{3}$த்$^{3}$த$^{4}$ராஸ்மாந், நமஸ்தே || (1) ||

த்வம் நோ மாதா த்வம் பிதா, (ஆ)ப்தோ, தி$^{4}$பஸ்த்வம் |
த்ராதா யோக$^{3}$, க்ஷேம க்ருத், ஸ்த்$^{3}$கு$^{3}$ரு, ஸ்த்வம் ||
த்வம் ஸர்வஸ்வம் நோ ப்ரபோ$^{4}$ விஸ்வமூர்தே |
கோ$^{4}$ராத், கஷ்டா, து$^{3}$த்$^{3}$த$^{4}$ராஸ்மாந், நமஸ்தே || 2 ||

பாபம் தாபம் வ்யாதி$^{4}$, மாதி$^{4}$ம் ச தை$^{3}$ன்யம் |
பீ$^{4}$திம் க்லேஸம் த்வம் ஹரா, (ஆ)ஸு, த்வத$^{3}$ன்யம் ||
த்ராதாரம் நோ வீக்ஷ ஈஸா, தஸ்த, ஜுர்தே |
கோ$^{4}$ராத், கஷ்டா, து$^{3}$த்$^{3}$த$^{4}$ராஸ்மாந், நமஸ்தே || 3 ||

**நான்யஸ், த்ராதா நாபி தா3தா ந ப4ர்தா |**
**த்வத்தோ தே3வம் த்வம் ஸரண்யோ, (அ)க4ஹர்தா ||**
**குர்வா, த்ரேயா, னுக்3ரஹம் பூர்ணராதே |**
**கோ4ராத், கஷ்டா, து3த்3த4ராஸ்மாந், நமஸ்தே || 4 ||**

**த்4ர்மே ப்ரீதிம் ஸன்மதிம் தே3வ, ப4க்திம் |**
**ஸத், ஸங்கா3, ப்திம் தே3ஹி பு4க்திம் ச முக்திம் ||**
**பா4வா, ஸக்திம் சா, கி2லானந்த3, மூர்தே |**
**கோ4ராத், கஷ்டா, து3த்3த4ராஸ்மாந், நமஸ்தே || 5 ||**


**ஸ்லோக பஞ்சக, மேதத்3, யோ**
**லோக, மங்க3ல, வர்த4னம் |**
**ப்ரபடே2ந், நியதோ ப4க்த்யா ஸ**
**ஸ்ரீத3த்த, ப்ரியோ ப4வேத் || 6 ||**

**ஜிதேந்த்3ரிய, க3ணா, க்3ரணீ, ரபி4ரத:பரே ப்3ரஹ்மணி |**
**கலௌ ஸ்ருதிபதா2வனே, (அ) த்ரிதனயோ, (அ) வதீர்ண : ஸ்வயம் ||**
**கராத்த, ஸுகமண்ட3லு : குமத, க2ண்டணே த3ண்ட3ப்4ருத் |**
**பத3, ப்ரணத, வத்ஸலோ ஜயதி வாஸுதே3வோ யதி: ||**

**ஸ்ரீ தேம்பே ஸ்வாமிகள் தக்ஷிண பாரத ப்ரசார கைங்கர்ய ஸபாவினால் (சென்னை) விநியோகிக்கப்பட்டது.**

தொடர்புக்கு :

**+91 94426 47810, +91 88258 15273**


வேதஸ்ரேணி
Mini Function Hall (A/C)
Traditional Ambience with Modern Amenities
Ayush Homam | Upanayanam | Birthdays | Engagement | Sangeeth | Mehendi | Wedding | Valakaapu | Seemandham | Shastiapthapoorthi | Sathabhishekam | Corporate Events
Ac Hall & Dining | Lift | Power Back Up | Car Parking | CCTV | Hall Capacity- 150 -200 | Guest Rooms-2
Vedashreni, No 215, 3rd Street, Ramnagar Vijayanagar, Velachery, Chennai-42
95002 67471 | 98414 46897
VEG FOOD ONLY

FORM IV

Statement about ownership and other particulars about newpaper VEDABHARATHI SEITHIGAL as required to be published under Sec. 19--D Sub sec (b) of the Press and Registration of Books Act read with Rule 8 of the Registration of New Papers ( Central Rules ) 1956

| | |
|---|---|
| 1 Place of publication | Chennai |
| 2 Periodicity of Publication | Monthly |
| 3 Printer's Name | R.Gowthama Sankar |
| Nationality | Indian |
| Address | Sabanayakam Printers, No 39, Millers Road,Kilpauk Chennai- 600 010. |
| 4 Publisher's name | R.VENKATARAMAN |
| Address | No 27, F-1 Pillaiyar Koil St, Annai Indira Nagar, Velachery, Chennai- 600042 |
| 5 Editor's Name | R.VENKATARAMAN |
| Nationality | |
| Address | No. 31, Seshadripuram 1st Main Rd Baby Nagar, Velachery, Chennai- 600 042 |
| 6 Name and Address of News Papers and shareholders holding one percent of the total captial | VEDABHARATHI SEITHIGAL No 27, F-1, Pillaiyar Kovil St., Annai Indira Nagar, Velachery, Chennai- 600042 |

I,R.Venkataraman, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Chennai - 600042 31.03.2025

( Sd ) R.Venkataraman

# சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹா ஸ்வாமிகள் அருளியவை

## நிலையற்ற வாழ்க்கை




சென்றமாத தொடர்ச்சி....

தவத்தின் பலனாய் அவர் பல்வேறு அஸ்திரங்களையும், கணைகளையும் மற்றும் பல விசேஷ சக்திகளையும் பெற்றார். தமது ஆற்றலைக் கண்டு பெருமிதங்கொண்ட விஸ்வாமித்திரர் மீண்டும் வசிஷ்டரைத் தம்முடன் போர் புரியுமாறு அழைத்தார். ஆனால் வசிஷ்டரோ எவ்வித சலனமுமின்றி தம் ஆஸனத்தில் அமைதியாக வீற்றிருந்தார். வசிஷ்டரைக் கொன்று நந்தினியைக் கவர்ந்து செல்வதற்காக விஸ்வாமித்திரர் பலவித அஸ்திரங்களை அவர் மேல் ஏவினார். வசிஷ்டர் தமது பிரம்மதண்டத்தை எடுத்து தம் முன்பு வைத்தார். விஸ்வாமித்திரர் விடுத்த சக்தி வாய்ந்த எல்லா அஸ்திரங்களையும் பிரம்மதண்டம் பலமிழக்கச் செய்துவிட்டது. ஒரு சிறு காயமும் ஏற்படாமல், சர்வ சாதாரணமாக அவர் வீற்றிருப்பதைக் கண்ட விஸ்வாமித்திரர், அவருடைய மகிமையை உணர்ந்தார். அத்தகைய தவ வலிமையைத் தாமும் பெற நினைத்து விஸ்வாமித்திரர். தமது இராஜ்ஜியத்தையும் மற்றும் உலக ஆசைகள் எல்லாவற்றையும் துறந்து, கடுமையான தவத்தில் ஈடுபட்டார். காலப்போக்கில், அவரும் வசிஷ்டரைப் போல் ஒரு மஹரிஷியானார்.

தொடரும்...

# தர்மத்தின் குரல்
# பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள்
## அத்தியாயம் 3 : வேதங்கள்



*3-9 வேதங்கள் வெளிப்பட்டவிதம் தொடர்ச்சி :*

நல்லெண்ணம் கொண்ட சிந்தனையாளர்கள், இத்தகைய தவறான பிரச்சாரங்களுக்கு இரையாகக்கூடாது. நிலைமை இவ்வாறே தொடராது, நல்ல எண்ணங்களை நோக்கிச் சீரடையும் என்பதற்கான அறிகுறிகள், அதிர்ஷ்டவசமாகக் காணப்படுகின்றன. வெறுப்போ எதிர்ப்போ இன்றி நடுநிலைக் கண்ணோட்டத்தோடு, இந்த மந்திரங்களைப்பற்றி மக்கள் சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள். நவீன விஞ்ஞானம் தந்துள்ள ஆழ்ந்த ஆய்வுக்கான வசதிகளைப் பயன்படுத்தி, நமது மரபுகளைப்பற்றிய பகுத்தாய்வில் மக்கள் இறங்கிவிட்டார்கள். மேலும் மேலும் அதிகமான மக்கள் வேதங்களால் ஈர்க்கப்படுகிறார்கள். அவர்கள், வேதங்களில் உறையும் கருத்துக்களைப் புரிந்து கொள்வதற்கான உண்மையான, நேர்மையான முயற்சிகளில் ஈடுபடுகிறார்கள். வேதங்கள் மனிதரால் இயற்றப்படாதவை என்பதும் அவர்களின் கவனத்தை ஈர்க்க ஆரம்பித்துவிட்டது என்பதும் உண்மை. நாம் மேலே கூறியுள்ள ஐந்து காரணங்களையும் விட, அதிகமான சான்றுகளை அவர்கள் காண்கிறார்கள். ரிக் வேதத்தின் முதல் ஸூக்தத்திலுள்ள காயத்ரீ சந்தஸ் (சீரமைப்பு) மட்டுமே, பீட்டர் ரோஸ்டர் என்ற ஜெர்மானிய விஞ்ஞானியை வியக்க வைத்துள்ளது.

தொடரும்...

# மூத்தோரே! கவனியுங்கள்!

காந்தலக்ஷ்மி சந்திரமௌலி பாகம் - 4 பகுதி - 3

## அத்தியாயம் — 3

பொதுவாக முதல் தலைமுறைக்கும் – மூன்றாம் தலைமுறைக்குமிடையே நடக்கும் "லடாய்" என்பது முதலில் ஆரம்பிப்பது உடை மற்றும் பேசும் விதத்தில் தான்.

நம் பேரக்குழந்தைகள் தன் 5வது வயதிலிருந்தே எனக்கு "இந்த உடை தான் வேண்டும், இந்த நிறம் தான் வேண்டும்" என்று தெளிவாகக் கூறுவதை நாம் ரகசியமாக ரசித்தாலும் லேசான கவலை எட்டிப் பார்ப்பதை தவிர்க்க இயலவில்லை.

இன்றைய நாகரீகம், வெளித்தோற்றம், சற்றேஅலட்சியமாகப் பேசுவது போன்றகவலை, அப்பேச்சு நம்மை நோக்கி வந்தால் கோபமென்று நாம் கவலைப்படுவதும், படபடப்பதும் நமக்கு மட்டுமே புரியும்.

முதலில் தாத்தா – பாட்டியாக நாம் செய்ய வேண்டிய மிக முக்கிய விஷயம் அவர்கள் பேசும் பொழுது அவர்களை நேருக்கு நேர் கூர்ந்து பார்ப்பது மட்டுமே. ஒரு வேளை கேள்விகள் கேட்டால் ஒற்றைவரியில் பதில் கூறபழக வேண்டும்.

அவர்களுடைய நடை, உடை, பாவனை, பேச்சு என்று அனைத்துமே அவர்களுக்குள் தோன்றும் தன்னம்பிக்கை இந்த தன்னம்பிக்கை பெற்றோர்களின் அரவணைப்பும், ஓரளவு பண வசதியும், கேட்டது கிடைக்கும் தன்மையும் அளிப்பதாகும்.

இதை கவனிக்கலாமே தவிர திருத்துவது உங்கள் கடமையல்ல. அதற்கு பதிலாக நீங்கள் பெற்றபிள்ளைகளைத் தான் திருத்த வேண்டும். ஆம், உங்கள் கண்களில் படும் குறைகளை மெதுவாக, மென்மையாக, 7வயது தான் ஆகிறதப்பா எனக்கு புரியறது. ஆனால் குட்டையாக "ஸ்கர்ட் (அ) லெக்கின்ஸ்" போட்டுக் கொண்டு சோபாவுல உட்கார்றவிதம் சரியாகயில்லை. வந்திருந்த விடலைப் பையன் பார்வை எங்கெங்கோ போறது. நீ கவனிச்சுட்டு நான் சொல்றது தப்பா, சரியான்னு பார்த்துட்டு சரி செய்யப்பா (அ) செய்யம்மா" என்று பேசிப் பாருங்கள்.

கொஞ்சம் மூச்சுவிட்ட பிறகு, "நீயும் இந்த அரை டிராயரை நிறுத்திவிட்டு "ட்ராக்-பேண்ட்" (Track Pant) அல்லது வேஷ்டி கட்டிப் பாரேன். உன்னை பார்த்துட்டு ஒரு வேளை உன் குழந்தை இத்தவறைசெய்தால் அது உன்கிட்ட "வெடுக்"னு பதில் சொல்லும். உனக்கு அப்புறம் பேச முடியாது. இதை நீயே சரி செய்துவிடு. அநாவசியமாக மருமகளை (அ) மருமகனை இதில் இழுக்காதே. பாவம், அவர்களுக்கும் ஆயிரத்தெட்டு பொறுப்பு இருக்கு இல்லையா?" என்று "வாழும் கலையை" கற்றுக் கொடுப்பது வீட்டில் அனைத்தையும் கவனிக்கும் சீனியர் சிட்டிசன்களின் கடமையல்லவா? உங்கள் குழந்தையிடம் பேச சரியான தருணத்தைப் பார்க்க வேண்டுமே தவிர "பேசவே பயமாக" இருக்கு என்று எண்ணுவது மாபெரும் தவறு.

7 அல்லது 8 வயதிலிருந்தே ஆண் (அ) பெண் குழந்தை தாத்தா, பாட்டியை அதிகமாக லட்சியம் செய்யாது போன்றேதோன்றும். இது சகஜமான ஒன்று. காரணம் பள்ளியில் ஒருவித கண்டிப்பு, வீட்டிலோ "மார்க்" கண்டிப்பை சதா எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை இன்று மிக அதிகமாக உள்ளது.

அக்குழந்தைகள் அடியோ, திட்டோ வாங்கினால் மட்டுமே உங்களிடம் ஓடி வரும். அப்பொழுது தட்டிக் கொடுத்தால் மட்டுமே போதுமானது. பேசத்தேவையில்லை.

ஒரு சுமுகமான சூழ்நிலையை உங்கள் கூட்டு குடும்பத்திற்குள் ஏற்படுத்த உங்களால் மட்டுமே முடியும். அந்த பக்குவமும், அனுபவமும் உங்களிடம் உள்ளதல்லவா? அதை நீங்கள் பெற்றகுழந்தைகளிடம் எதிர்பார்ப்பது தவறு.

நீங்கள் உருவாக்கிய குடும்ப உறவு, வேர் பிடித்துக் கொண்டு விட்டது. இனி உங்கள் வேலை, அவர்கள் உருவாக்கிய குடும்பத்தை அவர்கள் வளர்த்து ஆளாக்குவதை நன்கு கவனித்து, ரசித்து, தவறுகள் இருந்தால் மட்டுமே சுட்டிக்காட்டுவது.

நீங்கள் என்றோ ஒரு நாள் உதிரப் போகும் பழுத்த இலை. பச்சை இலை, உதிர்ந்த இலையைப் பார்த்து சிரிக்கும். ஆனால் தானும் இதுபோன்ற50, 60 வருடங்களுக்கு பிறகு உதிரப் போகிறோமென்று அதற்கு தெரியாதல்லவா?


"அவாஇல்லார்க் கில்லாகுந் துன்பம்அஃ துண்டேல்
தவாஅது மேன்மேல் வரும். (அதிகாரம் 37, குறள்– 368)

"ஆசை இல்லாதவர்களுக்கு துன்பமில்லாமல் போய்விடும் ஆசை இருக்குமாயின் தவறாமல் மேலும் மேலும் துன்பமுண்டாகும்" என்கிறார் வள்ளுவர் பெருமான்.

தொடரும்...

# பூக்களோடு பேசுவோம்
## “பிரபஞ்சத் தொட்டில்” எனும் தாமரை – 1

டாக்டர்.ஷ்யாமா ஸ்வாமிநாதன்




காசித்தும்பையுடன் பேசுவோம் என்று சொல்லிவிட்டு தாமரையுடன் பேச ஆரம்பித்துவிட்டாரே இவர் என்று நினைக்கிறீர்களா? காசித்தும்பையல்லவா? மஹாகும்பமேளாவில் ஸ்நானம் செய்வதற்கு பிரயாக்ராஜ் சென்றிருக்கிறது என்று நினைத்துக் கொள்வோமே! பூக்களுடன் பேசுவது என்பது, உங்கள் இதயத்துக்குள் ஆயிரம் தாமரை மொட்டுக்கள், வந்து ஆனந்த கும்மிகள் கொட்டுவது போல் இருக்கிறது அல்லவா? ஆம்! மகாலக்ஷ்மிக்குரிய தாமரை தான் இப்போது உங்கள் மனதுக்குள் வந்து மலரப் போகிறது. அர்ச்சனைக்குரிய பூக்களில் தாமரைக்கு எப்போதுமே முதலிடம்! காரணங்கள் ஒன்றல்ல, இரண்டல்ல, ஓராயிரம் சொல்லலாம். அத்தகைய மகத்துவம் வாய்ந்த மலர் தாமரை. இது நமது தேசத்தின் மலர். அதனால் நமக்கு மட்டுமே சொந்தம் என்று கொண்டாடிவிட முடியாது. வியட்நாம் மக்களுக்கும் இது தான் தேசியமலராகும்!. உலகளாவிய அளவில் அனைத்து உள்ளங்களையும் கொள்ளை கொண்ட ஒரு மலர் உண்டென்றால் அது தாமரையாகத்தான் இருக்கும். தாமரை பூத்த தடாகத்திற்குள் சற்று நேரம் சந்தோஷமாய் பயணித்து வருவோமே! மிக அதிக மன

*வேதனை ஏற்படும் போதெல்லாம், அதையே எண்ணி எண்ணி துன்பப்படுவதிலிருந்து விடுபடுவது எப்படி? என்கிற கேள்விக்கு பதிலாக, “தாமரை பூத்ததடாகத்திற்குள் சற்று நேரம் சந்தோஷமாய் பயணித்து வருவோமே!* **“ஒரு அழகிய மலரின் மீது உங்கள் பார்வையை செலுத்துங்கள்” என்று சொன்னார் சீனத்து மடாதிபதி ஒருவர். அதற்கும் சற்று மேலே சென்று “ஒரு மலரின் முகத்தில் இறைவனின் இதயத்தைக் காணுங்கள் என்கிறார் இன்னொரு ஆன்மீக குரு.** *மனதின் வருத்தத்தை போக்கி இறைவனின் இதயத்தையும் காண்பிக்க கூடியமலரான தாமரை, தன் இதழ்களைப் பரிபூரணமாக விரித்து, உங்களை நோக்கி, ஒரு புன்னகையை வீசி, “நலமா?” என்று ஒரு வார்த்தை கேட்டுவிட்டால் ரணப்பட்ட உங்கள் மனம் குணப்பட்டு பூவாகிப் போய்விடாதா என்ன?*

*உலகிலுள்ள பூஞ்செடிகளை ஒரு லக்ஷத்து ஐம்பதாயிரம் வகைகளாகப் பிரித்து, அவை ஒவ்வொன்றிற்கும் ஓராயிரம் வகைகளைக் கண்டறிந்து, அவற்றுள் மூவாயிரம் மலர்களை விசேஷம் என்று குறிப்பிட்டு, அவற்றுள் தாமரை மலரை மட்டுமே மனித வாழ்க்கையுடன் ஒப்பிட்டு பேசுகின்றன விஞ்ஞானமும், ஆன்மீகமும். தாமரை ஒரு புராதன மலர் என்பதில் அறிவு ஜீவிகளுக்கும், ஆன்மீகவாதிகளுக்கும் கருத்து பேதமில்லை. இந்த இன மலர்களிலிருந்து தான் எல்லா மலர்களும் தோன்றின எனும் கருத்திலும் அனைவருக்கும் உடன்பாடே. தாமரையைத் தங்களது அடையாளமாகக் கொண்ட உலக மதங்கள் பல இருந்த போதிலும், நமது இந்துமதத்தில் அதற்கு கொடுக்கப்பட்டிருக்கும் முக்கியத்துவம் ரொம்பவும் விசேஷமானது.*

கிரேக்க மதம், புத்தமதம், ப்ஹாய்மதமும் தாமரையைப் போற்றுகின்றன. இந்துமதத்தின் தெய்வங்கள் பலவும் தாமரையைத் தங்களுக்கே உரியது என்று சுவிகரித்துக் கொண்டுவிட்டன.



தாமரைக்கும் மனித வாழ்க்கைக்கும் மகத்தான ஒற்றுமை! இன்னும் சொல்லப்போனால் மனித வாழ்க்கையே தாமரைக்குள் அடங்கி கிடக்கின்றது எனலாம். **ஸ்ரீலங்காவின் சிவயோக சுவாமிகள்,** இதனைமிகத் தெளிவாக விளக்குகிறார்". "மனிதருக்குள் கெட்டவர்கள் என்று யாரும் இல்லை. அவனுக்குள் இருக்கும் தெய்வீகம் வெளிப்படுவதில்தான் கால வித்யாசம் இருக்கிறது. தாமரையின் விதை, கரிய குளத்தின் சேற்றில் விழுந்து, வேர் விட்டு, தண்டினை உருவாக்கி, பின் வானை நோக்கி உயர்ந்து, சிறியதாக மொட்டுவிட்டு, சூரியனைக் கண்டதும் இதழ்களை விரித்து, மகரந்தத்துடன் தேனீக்களை ஈர்த்து விடுகிறது. அவ்வாறேமனிதனின் பிறப்பும், ஆன்மீகத்தேடலும், மனிதனும் இருண்ட சேற்றில் விழுந்து, உருவாகி, வெளிவந்து படிப்பறிவு எனும் நீரை நோக்கி மேலே செல்கிறான். இந்த கட்டத்தில், அவன் மிருககுணசேற்றிலும், அறிவு பூர்வநீரிலும் இருக்க, வாழ்க்கையின் ஆன்மீக நோக்கம் அறியாமலே அல்லாடுகிறான். தாமரைத் தண்டு வானை நோக்கி, நீரை எதிர்த்து உயர்வது போல், படிப்பறிவை மட்டும் நம்பி வாழ்ந்த உலக வாழ்க்கை திருப்தி தருவதில்லை.

படிப்பறிவைத் தாண்டி, ஆன்மீகம் தேடுகிறோம். இதயம் எனும் தாமரை மொட்டு மூடியேகிடக்கிறது. அதற்குள் இறைவன் இருப்பது புரிகிறது. ஆனால் உணர முடியவில்லை. எது அதனை மலரச் செய்யும்? தாமரைக்கு சூரியன் போல், தனி மனிதனுக்கு எது? அல்லது யார்? தெய்வ ஆசீர்வாதங்களும் குருமார்களின் ஆன்மீக வழிகாட்டுதலும் தான். **(நன்றி : சத்குரு போதிநாத வேலன் சுவாமிகள்)**

**"தாமரை"** என்றவுடன் ஆன்மீகம் ஞாபகம் வருகிறதோ இல்லையோ **"தாமரை இலைத் தண்ணீர்"** என்றதத்துவார்த்தமான சொற்றொடர் சுலபமாக நினைவுக்கு வந்துவிடும். தாமரை இலைதான் வாழ்க்கை என்றால், அதன் மீதுள்ள ஒரு துளி நீர்தான் நமது வாழ்நாள். எந்த தருணத்தில் வேண்டுமானாலும் உருண்டு விழுந்து விடலாம் என்று தான் சொல்கிறது நமது வேதமும்.

தாமரையுடன் மேலும் பேசுவோம்...

தொடரும்...

# புதிய கணக்கு எண்

## வேதபாரதி குருகுலம் ட்ரஸ்ட்

## வேதபாரதி - வேதவகுப்பிற்கான வங்கி கணக்கு எண்கள் விபரம்

| | | |
|---|---|---|
| Account No | : | 510909010268668<br>Current Account |
| IFSC Code | : | CIUB0000262 |
| Bank | : | City Union Bank |
| Branch | : | Velachery |

**80G Approved**

# இராமாயணம் தரும் படிப்பினை

*சென்றமாத தொடர்ச்சி...*

*பிறகு ஹனுமனின் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் சுருண்டு கீழே விழுந்தாள். பிறகு சுதாரித்துக் கொண்டு எழுந்து ஹனுமனிடம், "நான் எப்போது ஒரு வானரம் மூலம் தாக்கப்படுகின்றேனோ அன்று முதல் இலங்கைக்கு அழிவு ஆரம்பம், எனது காவல் வேலையும், முடிவடைந்து விட்டது. இது பிரம்மனின் வாக்கு என்றாள். எனது காரியம் வெற்றி அடையும், உனக்கு வெற்றி உண்டாகட்டும் என்றாள். பிறகு இலங்கை நகரின் அழகு, இயற்கை வளங்களை ரசித்துக் கொண்டே இலங்கையில் நுழைந்தான்.*

*இராவணன் தனக்கு கிடைத்த வரங்கள் மூலம் மூவுலகையும் ஆட்டிப் படைத்தான். வஞ்சகமான முறையில் சீதையைக் கவர்ந்து அசோகவனத்தில் சிறைப்படுத்தியிருக்கிறான். தனது வரவு இலங்கை நகருக்கு அழிவை ஏற்படுத்த வேண்டும் என்றமுறையில் ஹனுமானது நடத்தை இருந்தது.*

*முதலில் பெண்கள் இருக்கும் பகுதிகளில் குறிப்பாகத் தேடினான், ஹனுமன் பிரம்மச்சாரி தனது நிலையையும் மறந்து தேடினான். அப்போது இராவணன் பல பெண்கள் சூழ அரண்மனையில் இருந்தான். இராமனைப் பிரிந்த சீதை, சதி எப்படி அரண்மனையில் இருப்பாள். தான் அங்கு தேடியது தவறு என்பதையும் உணர்ந்தான்.*

*நமது பாரதப் பண்பாடு பெண்களைத் தாயாக பார்க்க வேண்டும் என்கிறது. இதற்கு சரியான முன்னோடி. ஹனுமன், இலக்குவன். இலக்குவன் கலாசாரப் பின்னணி உள்ள குடும்பத்தில் வளர்ந்தான் இது சாத்தியம். ஆனால் ஹனுமன் விலங்கினத்தைச் சேர்ந்தவன். அப்படிப்பட்டவர் நைஷ்டிக*

பிரம்மச்சாரியாக இருப்பது அசாதாரணச் செயல். தான் ராமனது சேவகன். அவரது காரியத்திற்காக சீதையைப் பெண்கள் இருக்கும் பகுதியில் தேடினேன். மனதால் எந்தப் பெண்ணிடமும் ஆசை கொள்ளவில்லை. இதே போல் ஹிந்து சாம்ராஜ்யத்தை உருவாக்கிய சத்திரபதி சிவாஜி, தனது படைகள் மூலம் கொண்டு வரப்பட்ட எதிரிப்படையின் பெண்ணைத் தாய் போல் பாவித்து சகலவித மரியாதைகளுடன், அவளைக் குடும்பத்திற்கு அனுப்பி வைத்தார். அதே போல் வெளிநாட்டில் ஒரு பெண் அழகி விவேகாநந்தரிடம் தன்னை மனைவியாக ஏற்றுக்கொள்ளும்படி கூறினாள். உடனே அந்தப் பெண்ணை வணங்கி தாங்கள் எனது தாய், நான் உங்களது மகன் என்று கூறி நமது பண்பாட்டின் உச்சத்தையே தொட்டுவிட்டார். இவையெல்லாம் இன்றைய இளைய சமுதாயத்திற்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும்.

இராவணனைப் பார்த்த ஹனுமன் அவனது அழகில் முதலில் ஈர்க்கப்பட்டான் கடுந்தவம் இயற்றி அநேக வரங்களைப் பெற்றவன். சிறந்த வீரன். இவ்வளவு புகழ் உள்ள இராவணன் தனது அபரிமித சக்தியால் மூவுலகையும் ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தான். திறமை, தகுதி இருப்பவனிடம் வினயம் வேண்டும். தர்ம காரியங்கள் செய்தல் வேண்டும். இதற்கு நேர்மாறாக ஹனுமன் சிறந்த வியாகரண பண்டிதன், கர்வம் கிடையாது. தொண்டுள்ளம் கொண்ட உத்தம சேவகன் இராமனுக்கு. தனது பண்பினால் உலகில் பரிமளித்துக் கொண்டிருக்கின்றான். இராவணனிடம் இருப்பது புகழ் மட்டுமே. தர்மம் இல்லை. இராமன் இரண்டும் சேர்ந்த பண்புடையவன்.

அரண்மனை முழுவதும் தேடியும் சீதை

கிடைக்கவில்லை. ஒரு கட்டத்தில் ஹனுமன் விரக்தி அடைந்து விட்டான். சீதை அவனது ஆசைக்கு இணங்க மறுத்ததால் இராவணன் அவளைக் கொன்றிருப்பானோ என நினைத்தான் அவனது மனம் படபடத்தது. பிறகு தன்னையே நொந்து கொண்டான். தனது உயிரையே துறக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தான். உயிரை முடித்துக் கொள்வது விவேகமல்ல. உயிருடன் வாழ்ந்து சவால்களைச் சமாளிப்பது தான் உயர்ந்த வாழ்க்கை. நாம் நினைத்தது நடக்கவில்லை என்று கருதி உயிரை விடுவது அறியாமை. உயிர் இருந்தால் தானே நாம் உயர்ந்த வாழ்வு வாழமுடியும். வெற்றியை எட்ட முடியும் என்று நினைத்தான் ஹனுமன். இது நமக்கும் பாடம். இதுவரை இராம காரியத்தில் வெற்றி கிட்டியிருக்கின்றது. முழுத் திறமையுடன், தீவிரமாகத்தேடினால் சீதை கிடைப்பாள். நம்பிக்கையுடன் தேட வேண்டும். மனதைத் தளர விடக்கூடாது.

தொடரும்...

**- காந்தாமணி நாராயணன்**


**வேதபாரதி செய்திகள் புத்தக வங்கி கணக்கு எண்கள் விபரம்**

**சந்தா விவரம்**

வருட சந்தா ரூ.200

10 வருட சந்தா ரூ.1500

வங்கி மூலம் புத்தக சந்தா வழங்கிட

**VEDABHARATHI SEITHIGAL**

**City Union Bank, Velachery Branch**

**A/c No. 510909010246740 | IFSC : CIUB0000262**

**80G Approved**

# ராஜலட்சுமி கல்யாண மண்டபம்

வேளச்சேரி மெயின் ரோடு, தண்டீஸ்வரம்,
சென்னை - 600 042.




- 800 பேர் அமர்ந்து ஆசிர்வதிக்க ஏ/சி ஹால்.
- சகல வசதிகளுடன் கூடிய மணமகன், மணமகள் அறைகள்.
- உறவினர்கள் தங்க - குளிருட்டப்பட்ட அறைகள்.
- விசாலமான கார் பார்க்கிங்.
- வெகு அருகில் சிவன், பெருமாள் ஆலயங்கள்.
- நகருக்கு மத்தியில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற மண்டபம்.

24 மணி நேரமும தண்ணீர் & மாடுலர் கிச்சன் வசதி.

தொடர்புக்கு

**48625585 / 9840545585**

# தருவின் நிழலில்

## வில்வம் (BAEL, AEGLE MARMELOS) - ஏகல் மார்மெலோஸ்

சென்றமாத தொடர்ச்சி....



வில்வம் சிவபெருமானுக்கு மட்டுமின்றி அன்னைக்கும் மிக உயர்வாக அர்ப்பணிக்கப்படும் பூஜைக்குரிய இலையாகும். இதன் மூன்று இலைகளும் அன்னையின் இச்சா, ஞான, கிரியா சக்திகளைக் குறிக்கிறது. அன்னை மஹாலட்சுமி வில்வமர வடிவாக காட்சி தருகிறாள். லட்சுமி தேவிக்கு வில்வத்தால் பூஜிக்க, செல்வ வளம் பெருகும்.

மஹாலட்சுமிக்குரிய "ஸ்ரீ சூக்தத்தில்" வனத்தின் விருட்சங்களில் வில்வ வடிவாக லட்சுமி இருப்பதாக கூறப்பட்டுள்ளது.

**"ஆதித்யவர்ணே தபஸோதிஜாதோ வனஸ் பதிஸ்தவ வ்ருக்ஷோத பில்வ : - ஸ்ரீசூக்தம்**

வில்வ மரத்தின் ஒவ்வொரு பகுதியும் மருத்துவ குணங்கள் நிறைந்தவை. வில்வத்தின் மலர் விஷத்தை முறிக்கக்கூடியது. இவற்றின் இலைகளை உட்கொண்டால் உடலின் சர்க்கரை அதிகமாக இருப்பதை கட்டுப்படுத்துவதுடன், சீரான ரத்த ஓட்டத்திற்கும் துணைபுரிகிறது.

வில்வ மர காயை தங்க ஆப்பிள் (Golden Apple) என்பர். வில்வ பழம் வயிற்றுப்புண், கல்லீரல் பலம், ஆஸ்துமா, வயிறு சம்பந்தப்பட்ட உபாதைகள், சளி, மலச்சிக்கல், ஆரோக்கியமான குடல், ஆரோக்கியமான இதயம் ஆகியவற்றிற்கு சிறந்த மருந்தாக பயன்படுகிறது.

பொதுவாக வில்வம் சிவனுக்கு உகந்ததாக உள்ளது என்பதால் கிட்டத்தட்ட அனைத்து சிவாலயங்களிலும் வில்வமரம் வளர்க்கப்படுகிறது. சில சிவாலயத்தில் தல விருட்சமாகவும் உள்ளது.

ஆனால், 108 திருப்பதிகளில் 24வது திவ்ய தேசமாக விளங்கும் திருமங்கையாழ்வார் அவர்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட கிருபாசமுத்திரப் பெருமாள் கோவிலின் தலவிருட்சமாக வில்வ விருட்சமே இருக்கிறது.

திருவாரூர் மாவட்டம், கொல்லுமாங்குடியை அடுத்த சிறுபுலியூரில் "அருமாகடலமுதன் – சலசயனப் பெருமாளாக" மூலவரும், "கிருபாசமுத்திரப் பெருமாளாக" உற்சவரும் அருள்பாலிக்கின்றனர்.

பாஞ்சராத்ர ஆகமப்படி பூஜைகள், வழிபாடுகள், உற்சவங்கள் நடைபெறும். இத்திருக்கோவிலின் தீர்த்தம், திருவனந்த தீர்த்தம், மானச தீர்த்தம் என்றும், விமானம் நந்தியாவர்த்த விமானம் என்றும் பெயர் கொண்டுள்ளது.

ஆதிசேஷனுக்கும், கருடனுக்கும் ஏற்பட்ட பகை தீரும் பொருட்டு இந்த தலத்தில் பெருமாளை நோக்கி தவமிருந்த ஆதிசேஷனுக்கு மாசி மாத வளர்பிறைஏகாதசியில் காட்சி கொடுத்து, ஆதிசேஷனையே படுக்கையாக்கி குழந்தைவடிவில் அனந்தசயனமாக அருள்பாலிக்கிறார் கிருபா சமுத்திரப் பெருமாள். "கருடா சௌக்யமா" என்று கருடனைப் பார்த்து பாம்பு கேள்வி கேட்ட திருத்தலம். இத்திருக்கோவிலில் அனந்தாழ்வார் எனும் பெயரில் அருள்பாலிக்கும் ஆதிசேஷ பகவானை வழிபட, சர்ப்ப தோஷங்களிலிருந்து விடுபடலாம். செவ்வாய் தோஷம் உள்ளவர்களும் வழிபடவேண்டிய திருத்தலம்.

வியாசர், வியாக்ரபாதர் எனும் புலிக்கால் முனிவர் மற்றும் ஆதிசேஷன் வழிபட்ட திருக்கோவில்.

சிறுபுலியூர், புராணக் காலத்தில் சலசயனம், பாலவியாக்ரபுரம் எனும் பெயரால் அழைக்கப்பட்டது. இத்திருக்கோவிலின் தாயார் "திருமாமகள் நாச்சியார்" எனும் பெயரால் அருள்பாலிக்கிறார்.

தன்னை நாடிவரும் பக்தர்களுக்கு சேவை சாதிக்கும் இத்திருக்கோவில் பெருமாளை,

**கருமாமுகிலுருவா கனலுருவா புனலுருவா**
**பெருமால் வரையுருவா பிறவுருவா நினதுருவா**
**திருமாமகள் மருவும் சிறுபுலியூர்ச் சலசயனத்து**
**அருமாகடலமுதே உனது அடியே சரணாமே!**

- எனப்பாடி மங்களாசாசனம் செய்துள்ளார் திருமங்கையாழ்வார்.

**- ஆதிரையன்**

## 2025 - நிகழ்வுகள் மார்ச், ஏப்ரல் & மே

| | |
|---|---|
| *மார்ச் 4* | பதிகம் பாடுதல் |
| | வேதபாராயணம் |
| | கங்கை கொண்ட சோழபுரம் |
| *மார்ச் 9* | சமஷ்டி உபநயனம் – பாண்டிச்சேரி |
| *ஏப்ரல் 4&5* | சாஸ்த்ரா ப்ரீதி அச்சங்கோவில் |
| *ஏப்ரல் 18,19,20* | ஸ்ரீ சங்கர வித்யாலயா, ஊரப்பாக்கம் |
| *18.04.2025* | பெண்மையைப் போற்றுவோம் |
| *19.04.2025* | கோடி காயத்ரீ ஜப யக்ஞம் |
| *20.04.2025* | ஆயுஷ்ய ஹோமம் |

*16,17,18 மே மாதம்*
ஸந்த்யா வந்தன முகாம், APL குளோபல் பள்ளி, துரைப்பாக்கம்

மேலும் தொடர்புக்கு : **70101 88571 / 98402 01625**


**99940 89133**



**99940 89140**

# SRI SASTHA CATERING



*We are Supplying Meals,*
*Tiffin & Marriage Sear*
*Varieties on Order*



**28, Senthuran Colony, 2nd Street, Muvarasempet, Madipakkam, Chennai - 91**

# வியப்பூட்டும் விருஜ் பூமி யாத்திரை

## மதுரா விருந்தாவனில் ஸ்ரீ ராதாகிருஷ்ணமயம் – 3

**(Dr. ஷ்யாமா ஸ்வாமிநாதன்)**

*ராதே கிருஷ்ணா!* *எல்லாம் இறைசெயல்!*



*விருந்தாவன ஸ்வாஸமும் ஸ்பரிசமும் நெஞ்சை நிறைத்தது. அக்டோபர் 13-ம் தேதி (2024) மாலையிலிருந்தே யாத்ரீகர்களை வரவேற்க கோவிந்தபுரம் ஸ்ரீ ருக்மணி விட்டல் சமஸ்தான் அதிகாரிகள் விருந்தாவனத்தில்* **"ப்ரிய காந்த் ஜு மந்திர்"** *வளாகத்தில் அமைந்துள்ள* **ஷாந்திதாம்** *விடுதியின் வரவேற்பு அறையில் யாத்ரீகர்களை வரவேற்க தயாராக இருந்தனர். நாங்கள் ராதே ராதே எனும் மந்திர சொல்லைத் தொடர்ந்து கேட்கவும், உச்சரிக்கவும் ஆரம்பித்தோம். எங்கள் கார் விடுதி வாசலுக்கு வந்ததுமே விடுதியின் வாயில்காப்பாளர்கள் "ராதே ராதே" என்று உச்சரித்தவாறே கைகூப்பி வரவேற்றனர். வரவேற்பறை கதவினைத் திறந்துவிடுபவரும் அதே மந்திரத்தை உச்சரித்து எங்களை உள்ளே அனுப்பினார். விடுதி அதிகாரிகள் அனைவரும் அதே மந்திரத்தை சொல்லிக்கொண்டே, அவரவர் அறைகளின் சாவியைக் கொடுத்து, கைகூப்பி "அறைகளில் அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. ஏதாவது தேவையென்றால் தயங்காமல் எங்களை அழையுங்கள்" என்றனர். அனைவர் நெற்றியிலும் விருந்தாவனத்தின் கோபி சந்தனம் மிக அழகாக வீற்றிருந்ததை கவனித்தேன்.*

*"எல்லோருக்கும் காபி டிபன் தயாராக*

இருக்கிறது. இன்று அவரவர் விருப்பப்படி ஓய்வெடுக்கலாம் அல்லது எங்காவது சென்றுவரலாம். நாளை மதியத்திலிருந்து திட்டமிட்டபடி யாத்திரை தொடங்கும்” என்று கோவிந்தபுர யாத்ரா அமைப்பாளர்கள் அறிவித்தனர். இனிய தொடக்கமாக இருந்தது. நான் இந்த ஸ்ரீ ராதா கிருஷ்ண ஜன்ம பூமியான மதுரா – விருந்தாவனத்தின் புண்ணிய பூமிக்கு உண்மையிலேயே வந்து சேர்ந்து விட்டேனா! கிருஷ்ணா என்னைக் கைபிடித்து இங்கே அழைத்து வந்துவிட்டாயா? என்று என் உள்மனம் கேட்டுக்கேட்டு வியப்பில் ஆழந்து போனேன். இது என் முயற்சியால் ஆகிற காரியம் இல்லை. குருவருளும் திருவருளும் சேர்ந்தே சாத்தியமாக்கியது.



இந்த புண்ணிய பூமியில் இருக்கக் கிடைக்கும் மணித்துகள்களை கொஞ்சம் கூட வீணடிக்க மனமில்லாமல், உடனடியாகவே தரிசனங்களைத் தொடர முடிவெடுத்தோம். அதற்குள் திரு.பாரதி கணேசன் அருகிலுள்ள பார்க்க வேண்டிய ஆலயங்கள் பற்றி விசாரித்து வைத்துக் கொண்டார். அறைக்குச் சென்று சற்றே ஓய்வெடுத்துவிட்டு, கீழே இறங்கி, ஸ்ரீ ருக்மிணிவிட்டல் சமஸ்தானத்தைச் சேர்ந்த சுமார் பத்து சமையற்கலை வல்லுனர்கள் அன்புடன் பரிமாறிய சிற்றுண்டியை சாப்பிட்டுவிட்டு ஷாந்திதாம் விடுதியின் வாசலில் தயாராக இருந்த, டம் டம் எனப்படும் ஈ ரிக்ஷாவில் ஏறிக்கொண்டோம். இருள் சூழ ஆரம்பித்துவிட்டது. எங்கே போகிறோம்? என்ற என் கேள்விக்கு **“பிரேம் மந்திர்”** என்று பதில் சொன்னார் ரிக்ஷா ஓட்டுனர். சுமார் 3 கி.மீ. தூரத்தில், விருந்தாவனத்தின் அதி அற்புத **ஸ்ரீராம் – சீதா, ஸ்ரீராதா – கிருஷ்ண அன்பாலயம்.**

*மிகவும் பிரும்மாண்டமாகக் காட்சிதந்தது. அந்த வெண்பளிங்கு மாளிகை! இதனைக் "காதல் கோவில்" என்று தமிழில் குறிப்பிடுகிறார்கள். காதல் என்கிற வார்த்தை, கலியுகத்தில் மிகவும் சிதைக்கப்பட்டுவிட்டதால், அதைவிட உயர்சொல் பிரயோகமான* **அன்பாலயம், அதுவும் பேரன்பாலயம்** *என்பதே சரியாகப்படுகிறது.*

*பல வர்ண ஜாலங்களில் ஒளிரும் இந்த அன்பாலயத்தை இரவில் தரிசிப்பது என்பது மனதைக் கொள்ளை கொள்ளும் விஷயம் என்பது மட்டுமல்ல, கொடுத்து வைத்திருக்கவும் வேண்டும். உலக அதிசயங்களின் பட்டியலில் இடம் பெற வேண்டிய எத்தனையோ ஆலயங்களும் அரண்மனைகளும் இந்த பாரத தேசத்தில் இருக்கின்றன. அவற்றில் மதுரா – விருந்தாவனத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்த மாபெரும்* **ஸ்ரீ ராதாகிருஷ்ண, ஸ்ரீ ராமசீதாதேவியின் தெய்வீக அன்பாலயமும் ஒன்றாகும்.** *சுமார் 55 ஏக்கர் பரப்பளவில், வெண்பளிங்குக் கற்களால் அபரிமிதமான கலைநயத்துடன் இரண்டு தள ஆலயமாக உருவாக்கப்பட்டுள்ளது. இதனை* **ஜகத்குரு ஸ்ரீ கிருப்பாளு மகாராஜ்** *எனும் மகான்தான் சாத்தியமாக்கியுள்ளார். அந்த மகானுக்கு அனந்த கோடி நமஸ்காரங்களை, மனதிற்குள் சமர்பித்துக் கொண்டேன். முதல் தளத்தில் ஸ்ரீ ராதா கிருஷ்ணரும் அவர்கள் சார்ந்த திருவுருவங்களும் அதி சுந்தர அலங்காரத்தில் காட்சி தருகிறார்கள். இரண்டாம் தளத்தில் ஸ்ரீராம சீதா தேவியருடன் அவர்கள் சார்ந்த திருவுருவங்களும் அமைக்கப்பட்டுள்ளன என்று அறிந்தோம்.*

*எப்படியோ ஜன சமுத்திரத்தில் புகுந்து புறப்பட்டு, பேரன்பின் மகத்துவத்தை உலகிற்கு உணர்த்துவதற்காகவே இந்த பூமியில் மிகச் சாதாரணர்களாக அவதரித்த ஸ்ரீ ராதா கிருஷ்ணர்*

முன்னால் வந்து நின்றுவிட்டோம். வட இந்திய ஆலயங்களுக்கே உரிய ஜிலு ஜிலு அலங்காரத்தில் இதயம் நிறைந்தார்கள். இந்த பேரன்பு தம்பதிகளான ஸ்ரீ ராதாவும் கிருஷ்ணரும். காணக் கண்கள் கோடி வேண்டும். நான் எந்த ஒரு மந்திரத்தையும் முயன்றும் உச்சரிக்க இயலவில்லை. எல்லாம் அடியோடு மறந்துவிட்டதைப் போல் உணர்ந்தேன். “என்னை இங்கே உன் முன் கொண்டுவந்து நிறுத்தி விட்டாயே கிருஷ்ணா உனக்கு மனம் நிறைந்த நன்றிகளைச் சொல்வதைத் தவிர வேறு எனக்கு எதுவும் சொல்லத் தெரியவில்லை. நன்றி நன்றி அனந்தகோடி நன்றிகள் கிருஷ்ணா” என்று மட்டுமே மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டிருந்தேன். விருந்தாவனத்தில் முதல் தரிசனமே மிகவும் புகழ்பெற்ற பிரேம் மந்திரின் இரவு வர்ண ஜாலங்களுடன் நல்லபடியாக கிடைக்கப் பெற்றதில் மனம் பேரானந்தத்தில் மிதந்தது. **வாழ்க்கையில் எல்லாம் போதும் என்று அந்தக்கணம் மனம் நிறைவடைந்தது. கலியுகத்தில், அயோத்தி குழந்தை ராமர் தரிசனமும், விருஜ் பூமியில் ஸ்ரீ ராதா கிருஷ்ண தரிசனமும், சாத்தியப்பட்டுவிட்டால் வரப்பிரசாதம்தான்!.**

இந்த அன்பாலயத்தின் மண்டபம் சுமார் 73,000 சதுர அடிப்பரப்பளவில் தூண்கள் இன்றி, குவிமாடம் அமைப்பில் கட்டப்பட்டுள்ளது. உள்மண்டபத்தில் ஒரே நேரத்தில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் அமர்ந்து வழிபட முடியும் என்று கூறுகிறார்கள். இரவில் இதனை உணர முடியவில்லை. ஏனென்றால் இரண்டு கால்களையும் ஊன்றி நிற்கக் கூட இடமில்லாத கூட்டத்தில், விஸ்தீரணத்தை எவ்வாறு உணர முடியும்! அடுத்து இந்த அன்பாலயத்தின் இரண்டாம் தளத்தில் அமைதியாக வீற்றிருக்கும் ஸ்ரீ ராம் பரிவார் தரிசனம் செய்ய வேண்டும். காத்திருங்கள்!

விருஜ்பூமியில் பயணம் தொடரும்...


உ
திருமண பொருத்தம் இலவசம்
(அனைத்து சமூகத்தினருக்கும்)
வாட்ஸ்அப் மூலம் மட்டும்
பையன்கள் பெண்கள்
ஜாதக நகல்களை
வாட்ஸ் அப்பில்
அனுப்புதல் வேண்டும்.
தேதியூர். V.J. ராமன்
ஆத்மார்த்த ஜோதிடர்
9003195599
9445230940

# சிவராத்திரி

## சிவாலய ஓட்டம் நடைபெறும் சிறப்புமிக்க பனிரெண்டு சிவாலயங்கள்

(செஞ்சொல்லரசு. மீ.சீனிவாசன், எம்.ஏ.எம்.எட்., பரமக்குடி)

*மஹா சிவராத்திரி என்றாலே நம் நினைவிற்கு வருவது கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெறும் சிவாலய ஓட்ட வைபவமாகும். பக்தர்கள் கோவிந்தா, கோபாலா என முழங்கியபடி ஓட்டமும் நடையுமாக 12 சிவாலயங்களைத் தரிசித்து வழிபடுவர். இதுவே சிவாலய ஓட்டம் ஆகும்.*

*பாண்டவர்களில் மூத்தவரான தருமர் இராஜ சூய யாகம் நடத்த ஏற்பாடு செய்தார். அந்த யாகத்திற்குப் புருஷாமிருகத்தின் பால் கொண்டுவருமாறு பீமனைப் பணித்தார். அவனும் அதற்கிசைந்து புருஷாமிருகத்தை நோக்கிப் புறப்பட்டான்.*

*இடுப்புக்கு மேலே மனித வடிவமும், கீழே புலி வடிவமும் கொண்டு இருப்பது புருஷாமிருகம். புருஷாமிருகத்திற்கு விஷ்ணுவைப் பிடிக்காது. தனது எல்லைக்குள் யாராவது விஷ்ணு நாமத்தைக் கூறினால், அவரைத்தாக்கி அழிந்துவிடும். இந்த நிலையில் புருஷாமிருகத்தின் பாலைப் பெற்றுவருவது எப்படி? எனத்தயங்கி நின்றான் பீமன். இதுகுறித்து பீமன் கிருஷ்ணனிடம் வழிகேட்க, கிருஷ்ணரும் அவனுக்கு வழிகாட்டினார்.*

*அவனிடம் 12 ருத்ராட்சங்களைக் கொடுத்தார். "பீமா, புருஷாமிருகம் உன்னைப் பின் தொடர வேண்டும் என்றால் அதற்கு ஒரேவழிதான் உள்ளது. அதன் காதுகளில் கேட்கும்படி, "கோவிந்தா, கோபாலா" என்று கூறு உடனே கோபம் கொண்டு புருஷாமிருகம்*

உன்னைத் துரத்தும், அது உன்னைப் பிடித்துவிடும் நிலை ஏற்பட்டால் ருத்ராட்சங்களில் ஒன்றைக்கீழேபோடு, அது சிவலிங்கமாக மாறிவிடும். உடனே சிவபக்தி மிகுந்த புருஷாமிருகம் சிவலிங்கத்தின் முன் அமர்ந்து வழிபடும்.

வழிபட்டு முடிந்தபின்னர் மீண்டும் உன்னைத் துரத்தத் தொடங்கும், அதற்குள் நீ வெகுதூரம் ஓடிவந்துவிட வேண்டும் என்றார் கிருஷ்ணர்.

பீமனும் இவ்விதமே செய்தான். இதன் மூலம் 12 ருத்ராட்சங்களில் 11 இடங்களில் 11 ருத்ராட்சங்களைப் போட்டான். அந்த ருத்ராட்சங்கள் சிவலிங்கமாக மாறியது கண்டு வழிபட்டது புருஷாமிருகம். இறுதியாக பீமனும், புருஷாமிருகமும் திருநட்டாலத்தை அடைந்தனர். அங்கு 12ஆவது ருத்ராட்சத்தைப் பீமன் போடும்போது பீமனின் ஒருகால், புருஷாமிருகத்தின் எல்லைக்குள்ளும் மற்றொருகால் வெளியிலும் இருந்தன. பீமன் மிருகத்தின் எல்லையைக் கடந்துவிட்டதாகவும், தன்னை விட்டுவிட வேண்டும்” என்று கூறினான். புருஷாமிருகம் தருமரிடம் நியாயம் கேட்டது. தருமர் உடனே, பீமனின் பாதி உடல் புருஷாமிருகத்திற்கே எனத் தீர்ப்பளித்துவிட்டார்.

அப்போது ஸ்ரீ கிருஷ்ணர் அங்குதோன்றி பீமனுக்கும், புருஷாமிருகத்திற்கும், “அரியும் அரனும் ஒன்றே” என்னும் தத்துவத்தை உணர்த்தினார். தருமர் யாகம் செய்திடப் புருஷாமிருகம் உதவி செய்தது.

இந்நிகழ்வைக் குறிக்கும் வண்ணம் 103 கி.மீ. தூரமுடைய 12 சிவாலயங்களுக்கும் “கோவிந்தா, கோபாலா” எனக் கூறிக்கொண்டு ஓடி ஓடி மகாசிவராத்திரி நாளில் தரிசிக்கின்றனர் பக்தர்கள்.

இவ்வோட்டம் முஞ்சிறைதிருமலை மகாதேவர் கோவிலில் தொடங்கி, திக்குறிச்சி, திற்பரப்பு, திருநந்திக்கரை, பொன்மனை தீபிலான்குடி, திருப்பன்றிப்பாகம், கல்குளம், மேலாங்கோடு,

திருவிடைக்கோடு, திரவிதாங்கோடு, திருப்பன்றிக்கோடு மகாதேவர் கோவில்கள் வழியே திருநட்டாலம் சங்கர நாராயணர் கோவிலில் நிறைவு பெறும்.

காவி உடையணிந்து ஒருகையில் பனைவிசிறி மற்றொரு கையில் சிறுபண முடிப்பும் வைத்துக் கொண்டு ஓடுவர்.

மகாசிவராத்திரிக்கு முன்வரும் தேய்பிறை ஏகாதசிக்கு ஒருவாரம் முன்பிருந்தே தங்களுடைய விரதம் தொடங்குகின்றனர். விரத நாள்களில் காலை முதல் மாலை வரை இளநீர், நுங்கு ஆகியவற்றையும் இரவு துளசியும் துளசி தீர்த்தமும் அருந்துகின்றனர்.

குருசாமி ஒருவர் வழிகாட்டிடுவார். இதனை ஒரு தவமாகபக்தர்கள் பாவிக்கின்றனர். 12 சிவாலயங்களின் பெருமைகளை நாம் அறிந்து கொள்வோம்.

கோவிந்தா! கோபாலா!!

ஓம் நமசிவாய.

தொடரும்...

## திருமண வாழ்த்து

வேதபாரதியின் வேதவகுப்பு உறுப்பினர்
ஸ்ரீ ரமேஷ்குமார் - ஸ்ரீமதி லலிதா ரமேஷ்குமார்
குமாரத்தி சௌபாக்கியவதி **அனுராதா ராகவிக்கும்**
சென்னை ஸ்ரீ பாலசுப்பிரமணியன் - ஸ்ரீமதி சர்மிளா
குமாரன் சிரஞ்சிவி **பா.ஆகாஷ்-க்கும் 16.03.2025 ஞாயிற்றுக்கிழமை தாம்பரம் ஸ்ரீ வாசுதேவா திருமண மண்டபத்தில்** திருமணம் வைதீக முறைப்படி சீரும் சிறப்புமாக நடைபெறவும் மணமக்கள் எல்லா நலமும் வளமும் பெற்று வாழவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம். வாழ்க மணமக்கள்.

**வேதபாரதி**

## விரைவில் புதிய ஸ்லோக வகுப்புகள்

## கோரகஷ்ட நிவாரண ஸ்தோத்ரம்

**ஶ்ரீ ஶ்ரீ தேம்பே ஸ்வாமிகள் அருளியது.**

பூஜ்யஶ்ரீ நெரூர் ஶ்ரீ வித்யா ஸங்கர ஸரஸ்வதி ஸ்வாமிகள் அருளாசியுடன் ஆரம்பம்
ஆசிரியர் : ஶ்ரீ முரளிதரன், மதுரை
ஶ்ரீமதி. நீலா முரளிதரன், மதுரை

## ப்ரஹ்மோபதேச வாழ்த்துக்கள்

**02.03.2025, ஞாயிற்றுக்கிழமை**

வேதபாரதியின் வேதவகுப்பு உறுப்பினர் ஶ்ரீ பிரபாகர் - ஶ்ரீமதி ஜெயஶ்ரீ தம்பதியரின் கனிஷ்ட புத்திரன் **சிரஞ்சீவி. ஷாஷ்வத் (எ) இராகவராமனுக்கு** ப்ரஹ்மோபதேசம் நங்கநல்லூர் ஶ்ரீ சாய்ராம் மஹாலில் நடைபெற்றது. எல்லாம் வல்ல பரமேஸ்வரன் திருவருளால் சகல சௌபாக்கியமும் பெற்று வாழ வேதபாரதி மனதார வாழ்த்துகிறது.

## சமஷ்டி உபநயனம் - புதுச்சேரி

க்ரோதி வருஷ ஸமஷ்டி உபநயன ப்ரம்மோபதேச சுபமுகூர்த்தம் 09.03.2025, ஞாயிற்றுக்கிழமை, புதுச்சேரி, வழுதாவூர் சாலை சங்கமம் திருமண நிலையத்தில் 11 குழந்தைகளுக்கு உபநயனம் செய்து வைக்க வேதபாரதி புதுச்சேரி சிறப்பு ஏற்பாடுகள் செய்துவருகிறார்கள்.

ஆச்சார்யார்கள் அனுக்ரஹத்துடன் நடைபெற உள்ள வைபவத்திற்கு எல்லோரும் வந்திருந்து குழந்தைகளை ஆசீர்வதித்து வேதபாரதிக்கு உறுதுணையாக இருக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

**வேதபாரதி, புதுச்சேரி.**

## கோடி காயத்ரீ ஜப யக்ஞம் – சேலம்

*26.01.2025 அன்று கோடி காயத்ரீ ஜப யக்ஞம் ஸ்ரீ காஞ்சி காமகோடி காமாட்சி கோவில் சன்னதியில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. வேதபாரதியின் வேதவகுப்பு அத்தியாபகர் (VB7) ஸ்ரீ ராஜா கனபாடிகள், டாக்டர் ஸ்ரீதர் பொறுப்பெடுத்து சிறப்பாக நடத்திக் கொடுத்தார்கள். முதல் நாள் 25-ம் தேதி காலை முதல் வேதபாரதி நிர்வாகிகள் ஸ்ரீராமகிருஷ்ணன், ஸ்ரீமதி வித்யா, ஸ்ரீ சங்கர், ஸ்ரீ ரகுநாத் மாமா, ஒசூர் ஸ்ரீ பாபு ஷர்மா, C.V.த்ரிபுவன் (VB5), கரூர் S.G. சங்கர், ஸ்ரீ அனந்த கிருஷ்ணன் ஆகியோர் முன்னேற்பாடு பணிகளை மிகுந்த சிரத்தையுடன் ஏற்பாடு செய்து கொடுத்தனர். மறுநாள் 26.01.2025 அன்று காலை 6.00 மணிமுதல் பூர்வாங்க பூஜைகள், கோபூஜை, கணபதி ஹோமம், காயத்ரீ மாதா பூஜை, காயத்ரீ ஹோம சங்கல்பம் நடைபெற்றது. காலை 7.30 மணிக்கு ஆறு ஹோம குண்டங்களுக்கும் ரித்விக்குகள் ஸ்ரீ ராஜா குருஜி மற்றும் சேலம் ஸ்ரீ சீனிவாஸ ஸாஸ்திரிகள் வழிகாட்டுதலில் ஹோமங்கள் நடைபெற்றது. வேதவகுப்பு ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீ மகாலிங்கம் காயத்ரீ மந்திர உச்சாடனம் செய்தார்கள். 10.30 மணிக்கு ஹோமம் பூர்த்தியின் போது ஒசூர் பூஜ்யஸ்ரீ குகை ஓம் ஸ்வாமிகள் எழுந்தருளச் செய்தார்கள். பூர்ண கும்ப மரியாதையுடன் ஸ்வாமிகளுக்கு வேதபாரதி நிர்வாகிகள் வரவேற்பு கொடுத்தார்கள். ஸ்வாமிகள் ஆசியுரைக்குப்பின் எல்லோருக்கும் ஆச்சாரமான உணவு வழங்கப்பட்டது. சேலம் மரவனேரி மற்றும் அதன் பகுதியிலுள்ள பிராமண சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். ரித்விக்குகள் தங்குவதற்கு காஞ்சி ஸ்ரீ காமாட்சி கல்யாண மண்டபம் பொறுப்பாளர் ஸ்ரீ சந்திரமோகன் அவர்கள் மற்றும் அறங்காவலர்கள் மிகுந்த ஒத்துழைப்பு நல்கினார்கள்.*

ஆசிரியர்.

# ANATHA PRETHA KAINKARYA TRUST
# அநாத ப்ரேத கைங்கர்ய ட்ரஸ்ட்

Communication Address : S. SREEDHAR, 32, Ground Floor, Raja Nagar, 1st Main Road, Neelangarai, Chennai - 600 115.

Mobile : +91-9500005772, +91-9840243592, +91-9445378071

Email : dharmaa.apkt@gmail.com Website : www.dharmaa.org



## ஸ்ரீ காஞ்சி மஹா ஸ்வாமிகளின் அருளுரை
## தெய்வத்தின் குரல் 3ம் பாகம்
## அநாதைப் பிரேத ஸம்ஸ்காரம்
## இது தான் அச்வமேதம்

*இதுவரை அச்வமேதத்துக்கு ஸமமான பலனைத் தருகிற ஒரு பணியைச் சொல்லவில்லை. மற்ற எல்லாவற்றையும் விட உயர்ந்ததான அந்தப் பணி என்னவென்றால், அதுதான் அநாதைப் ப்ரேத ஸம்ஸ்காரம்*

**அநாத ப்ரேத ஸம்ஸ்காராத்**
**அச்வமேத பலம் லபேத்**

*என்பது சாஸ்த்ர வசனம்*


*பர - உபகாரமாக, செத்துப் போன இன்னொரு ஜீவனுக்கு இதனால் உதவி பண்ணும் போதே, நமக்குப் பாபம் வராமல், கடமையைச் செய்து, நமக்கு உபகாரம் பண்ணிக் கொள்கிறோம்.*

**இந்த அறக்கட்டளையின் நோக்கம்**

1. *அநாத ப்ரேத ஸம்ஸ்காரம்*
2. *கர்த்தா ஏழையாக இருந்தால் அவர் செய்கின்ற தகன காரியங்களுக்கு உதவி செய்தல்.*
3. *நீத்தார் கடன், அந்த்யேஷ்டி இவைகளை குறித்து தர்மப்ரசாரம் செய்தல், பொது மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்.*
4. *மருத்துவமனையில் பல மாதங்களாக கிடக்கும் ப்ரேதங்களை அரசு அல்லது நீதிமன்ற உத்தரவு பெற்று உரிய ஸம்ஸ்காரம் செய்தல்*

**Contributions can be sent to :**
**A/c Name : Anatha Pretha Kainkarya Trust**
**Bank Name : Canara Bank, T.Nagar Branch**
**SB A/c No : 0917101048526 / IFSC Code : CNRB0000917**

**Cheques should be sent to the communication Address listed on top of this page. The donors are requested to send an email to dharmaa.apkt@gmail.com with full details of transfer, Address, email and contact Number.**


CITY UNION BANK
City Union Bank introduces
" Voice Biometric Authentication"
in CUB All in One Mobile Banking App
in Association with
KAIZEN VOIZ
simple-seamless-secure
IDRBT
Explore, Enable, Excel
VOICE
BIOMETRIC
"Your voice is your password"

RNI No. : TNTAM/2016/73726 REGD No. : TN/CC(S)DN/571/24-26 
Date of Publication First Week of Every Month
Licenced to Post without Pre Payment - TN/PM G (CCR) / WPP 605/24-26
Posted at Patrika Chennai, Egmore.
Posted between 1 - 7th March 2025

மரம் வளர்ப்போம் இயற்கையை காப்போம்



நம் தலைமுறை நம்மை போற்றட்டும்

தரமான நகைகளுக்கு
சரியான முகவரி....
சூர்யா ஜீவல்லர்ஸ்®
287, 288, புளியமரச்சந்து, ஈஸ்வரன் கோவில் வீதி, திருப்பூர் - 4. போன் : 0421 2241829
97862 41829 www.suryajewellers.co.in

To

____________________

____________________

____________________

____________________

If not delivered please return to
**VEDABHARATHI**
No.31, Seshadripuram 1st Main Road, Baby Nagar, Velachery, Chennai-42.